Registered with Registrar of Newspaper for India under No. 17755/69

DECEMBER 16, 2007.

RANI MUT... (FORTNIGH...) Regd. No. ...

# "ராணி முத்து" காலண்டர் - 200...




- ★ வீட்டுக்கு அழகு தரும் முருகன் படம்!
- ★ நாள்தோறும் நல்லநேரம்!
- ★ நுட்பமாகக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கக் குறிப்பு...

**உங்கள் காலண்டருக்கு முந்துங்கள்...**

"ராணி பிரிண்டர்ஸ், சென்னை-600 007.



# இளம் பெண்கள் குண்டாவது ஏன்?



உடல் பருமன் பிரச்சினை பெண்களுக்கு மட்டுமல்லாமல், பெண் குழந்தைகளுக்கும் உண்டு. தாயின் எடையைப் பொருத்து பெண் குழந்தையின் எடை அமையும்.

கர்ப்பிணி பெண்கள் எடை அதிகமாக இருக்கக்கூடாது. கருதரித்த நிலையில் எடை அதிகமானால், வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு எடை கூடாவிட்டாலும், அந்த குழந்தை 28 வயதை அடையும்போது எடை அதிகரிக்கும்" என்று நியூயார்க் பல்கலைக்கழக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## ஆணா? பெண்ணா?

ஒரு குழந்தை ஆணா- பெண்ணா என்பதை முடிவு செய்வது தாய் அல்ல... குழந்தையின் தந்தையுடைய 'குரோமோசோம்'கள்தான்.



1

"நாலணாவுக்கு கற்பூரம்
நெஞ்சு நிறைய சத்தியம்
போதும் எங்க சங்கிலிக் கருப்பனுக்கு!"

—நாட்டுப்புறப் பாடல்.

தீர்ப்பு வந்துவிட்டது!

அதுவும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு.

இனி எதுவும் செய்ய முடியாது.

'கோவிந்தசாமி தனது ஐந்து ஏக்கர் நிலத்தையும், அதில் வற்றாத ஊற்றாக உள்ள வட்டக் கேணியையும், குறிப்பாக- சடைசடையாக காய்த்துக் கொட்டும் அந்த புளிய மரத்தையும் காளிங்கனிடம் ஒப்படைத்தே தீரவேண்டும்!'

அழுகையாக வந்தது.



# ஆயிரம் அரிவாள் கோட்டை

இந்திரா சௌந்தர்ராஜன்

கோவிந்தசாமிக்கு!

கோர்ட்டுக்கு வெளியே நின்று அழும்போது இரண்டு கைகளையும் நீட்டி ஒரு பார்வை பார்த்தார்.

'எல்லாம் இந்த கையால் வந்த வினை. இதுக்கு என்ன எழுதறோம், ஏது எழுதறோம்னே தெரியமாட்டேங்குது. அதாங்.. காளிங்கன் நீட்டுன காகிதத்திலெல்லாம் கையெழுத்த போட்டுடிச்சு!'

மனதுக்குள் புகைய, கைகளை போட்டுக் குத்திக்கொண்டார். பக்கத்தில் வெள்ளையும் சொள்ளையுமாய் வர்ணம் உதிர்ந்த நீதிமன்ற கட்டிட சுவர். அதை நெருங்கி 'படேர்... படேர்' என்று அடித்துக்கொள்ளவும் செய்தார்.

நல்லவேளை... கூடவே ராமக்கா முதல், பூச்சித்தேவர் வரை பலர் வந்திருந்தார்கள்.

இழுத்துப் பிடித்து "கோட்டி மனுஷா... இப்ப வருத்தப்பட்டு என்னய்யா பிரயோஜனம்? அன்னிக்கு எங்க போயிருந்துச்சாம் இந்தப் புத்தி?"

இகழ்ந்தார் பூச்சித்தேவர். கோவிந்தசாமியும் பதிலுக்கு அழுதார்.

"போவட்டும் விடு... ஏமாத்திப் புடுங்கின சொத்துல அவன் என்னத்தை வாழ்ந்துடப் போறான்? எல்லாம் அந்த ஆண்டவன் பார்த்துப்பான்" என்று தேற்றிவிட்டார். கோவிந்தசாமி அழ, பூச்சித்தேவர் ஆறுதல் தர, மவுனமாக கூடவே இருந்தான் பாண்டியன். ஒரே மகன்!

மனசு பாறையாக கனத்துக்கொண்டிருந்தது, அவனுக்கு. வவ்வால்களாட்டம் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருக்கும் வக்கீல்களுக்கு நடுவில் காளிங்கன் வந்துகொண்டிருந்தான்.

பங்காளி!

கையில் 'பிரெஸ்லெட்'டென்ன? கழுத்தில் புலி நகச் செயினென்ன? மூன்று பட்டனை திறந்துவிட்ட



சந்தனநிற பட்டுச்சட்டையென்ன? கட்சிக்கரை போட்ட வேட்டியென்ன?

தூள்கிளப்பினான்!

உலகில் பெரிய மீசைக்கு என்று ஒரு போட்டியை யாராவது நடத்தினால் காளிங்கனுக்கு முதல் பரிசு கிடைக்கும்.

அப்படி ஒரு ரவுத்திரமான மீசை. கம்பிக்கணக்காய் முடிகளிடமும் ஒருவித உறுதி.

கண்களிலும் சதா சாராயச் சிவப்பு இருக்கும். நமது சினிமாக்களில் இவன் ரகத்தில் நிறைய வில்லன்கள் வந்துவிட்டார்கள்.

இருந்தாலும் 'ஒரிஜினாலிடி' காளிங்கனிடம்தான்! அவன் வரவும் ஒரு கார் அவனைத் தேடிவந்து உரசிக்கொண்டு நின்றது.

அதில் அவனைப் போலவே சிலர். வீரப்பன், மொட்டை மாரி என்றெல்லாம் அவர்களுக்கும் திருப்பெயர்கள்.

"ஏறுங்கப்பு... கெலிச்சாச்சுல்ல. இன்னிக்கு விருந்து கொடுத்து பட்டைய கிளப்பிப்புடணும். பார்த்திபனூர் பங்கஜத்தை வேற வரச்சொல்லி இருக்கோம். ஆளு வள்ளிக்கிழங்க அவிச்சு வச்ச மாதிரி இருப்பா. ஒரு அமுக்கு அமுக்கிப்பிடுவோம்."

உள்ளே இருந்து அவர்களில் மொட்டை மாரி கூவினான்.

காளிங்கனும் காரில் ஏறும்முன் கோவிந்தசாமியை ஒரு பார்வை பார்த்தான். கூடவே இருந்தான், அவர் மகன் பாண்டியன்.

"எலேய்... உன் நொன்னை அஞ்சு ஏக்கருக்காக என்னை கோர்ட்டு படி ஏற வைச்சுட்டேல்ல... வைச்சிக்கிறேன்டா உங்களை..." என்று கார் அருகில் நின்றபடியே ஒரு அதட்டலான மிரட்டலுடன் காரில் ஏறினான்.

காரும் சிறகு முளைத்த மாதிரி பறக்கத் தொடங்கிவிட்டது.

பாண்டியனுக்கும் நல்ல இளவட்ட உடம்பு. அதில் 'வைண்டிங்' செய்த மாதிரி நரம்புகள். அந்த நரம்புகளில் 'குபுக்'கென்று

மின்சாரம் பாய்ந்தது. கண்கள் இரண்டும் சிவந்து எரிந்தன.

"விடு பாண்டியா... அவன் பேமானி. பொறுக்கி. தப்ப நம்ம மேல வைச்சுகிட்டு கோவிச்சு என்ன பிரயோஜனம்? இனி ஆவற காரியத்தைப் பார்ப்போம். பாட்டன் சொத்து போனா என்ன... கை காலு இருக்குது இல்ல... எல்லாம் சம்பாரிச்சுக்கலாம்!"

அதுவரை பேசாத ராமக்கா அவனை சமாதானப்படுத்தினாள். அவன் அத்தை. கணவனை இழந்தவள்!

அப்படியே நடந்தார்கள்.

கோர்ட்டு கட்டிடத்தைக் கடந்து வெளியில் சென்று ஒரு ஆட்டோ பிடிப்பதற்காக நின்றார்கள்.

அப்போது காளிங்கனுக்காக வாதாடி, அவனுக்கு வெற்றியைத் வாங்கித் தந்த வக்கீல் வாதிராஜின் காரும் அவர்களைத் தாண்டிக்கொண்டு போனது.

"நாசமாப்போனவன்... உண்மை யார் பக்கம்னு தெரிஞ்சும் காசுக்கு மலந்துட்டான்."

ராமக்கா வெளிப்படையாக குமுறினாள். அதற்குள் ஆட்டோ ஒன்றை பூச்சித்தேவர் பிடிக்க- அதில் நால்வரும் நெருக்கிக்கொண்டு ஏறப்போனார்கள்.

ஆட்டோக்காரன் ஒரு பார்வை பார்த்தான்.

"இது பட்டணம்...மூணு பேருக்கு மேல போனா போலீஸ்காரன் சந்தோஷமா ஒரு குதிகுதிப்பான். மடக்கிப் பிடிச்சு நூறு ரூபாயை வாங்கிகிட்டுதான் விடுவான்" என்றான்.

"இங்க நூறு ரூவாயா? எங்க மருதையில இன்னும் அம்பது தான்" என்ற பூச்சி இன்னொரு ஆட்டோ பிடித்து, அதில் பாண்டியனோடு ஏறிக்கொண்டார்.

ஆட்டோக்கள் எழும்பூர் ரெயில் நிலையத்தைக் குறி வைத்தன!

கோவிந்தசாமி மட்டும் குமுறிக்கொண்டேதான் வந்தார்.



"ஏமாத்தி கையெழுத்த வாங்கிப்புட்டானே தாயி... அவன் வெளங்குவானா?"

"பேசாம வாண்ணே... அது முடிஞ்ச கதை. இனி தண்ணி, சிட்டுன்னே நீ நினைக்கக்கூடாது. அதுக்குத்தான் சாமி உன்னை இப்படி தண்டிச்சிருக்குது."

"அடப்பாவி தாயி... என்னை தண்டிச்சதாவே இருக்கட்டும். அவன் என்ன யோக்கியம்? களவாணிப் பயலாச்சே! அவனை உட்ருச்சே?"

கோவிந்தசாமியின் கேள்வியிலும் நியாயம் மின்னியது. ராமக்கா அந்த கேள்விக்குப் பதில் சொல்லமுடியாத மாதிரி மவுனித்தாள்.

"சாமி, பூதம்லாம் பொய்யி தாயி. எங்கேயும் தாட்டியமா இருந்தாதான் பொழைக்காலம். நான் ஒரு இளிச்சவாயன்."

"பேசாம வாண்ணே... இனி என்னத்தப் பேசி என்ன பிரயோஜனம்? அதான் முடிஞ்சுபோச்சுல்ல?"

"ஆமாம்... எல்லாம் முடிஞ்சுபோச்சு. இருந்த ஒரே சொத்தையும் உட்டுப்புட்டேன்."

ஆட்டோ டிரைவர்கூட திரும்பிப் பார்த்தான்.

"என்னாச்சு... வழக்கு தோத்துப்போச்சாக்கும்?" கோர்ட்டு வாசலில் ஏறியதை வைத்து கனகச்சிதமாக கேட்டான்.

"ஆமேங்... ஒரு எடுபட்ட பைய ஏமாத்தி சொத்தைப் புடுங்கிப்புட்டான். வக்கிலு, நீதிபதி என அம்புட்டு பேருக்கும் காசைக் கொடுத்து ஒரே அமுக்கா அமுக்கிப்பிட்டான்."

"அப்படியா சமாசாரம்... ஆமா, உங்க பக்கம் நிஜமாலுமே தப்பு ஒண்ணும் இல்லையே?"

"நீ போப்பா... இனி எதைப் பேசி என்ன பயன்?"

"சும்மா சொல்லுங்க. ஒரு வழி இருக்கு, நான் சொல்றேன்."

"என்னத்த சொல்லுவே... இதுக்குமேல ஒரு கோர்ட்டு இருந்தா அங்கே போய் முட்டுன்னு சொல்லுவே."

"நொந்து நூலாகாம என் கேள்விக்கு பதிலைச் சொல்லுங்க. உங்க பக்கம் ஒரு தப்பும் இல்லையே?"

"இல்ல தம்பி... ஒரு நாள் சீட்டு விளையாடும்போது நல்லா சாராயத்தை ஊத்தி, இவரைப் போதையில இருக்க வைச்சுட்டு, அப்ப பத்திரத்துல கையெழுத்த வாங்கிப்புட்டான் எங்க பங்காளி. தண்ணி போட்டதும், சீட்டாடினதும்தான் இவர் செஞ்ச குத்தம்."

"அப்ப சரி... நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?"

"என்ன?"

ராமக்கா சாதாரணமாகத்தான் கேட்டாள். அவன் உடனே பதில் சொல்லாமல் சிக்னலில் தேங்கி நின்று, பின் பச்சை விளக்கு விழவும் கிளப்பும்போதும் சொன்னான்:

"நேரா ஆயிரம் அரிவாள் கோட்டைக்கு போங்க. அங்க சங்கிலிக் கருப்பசாமி இருக்குது. அதுக்கு ஒரு அருவாளை வாங்கி நட்டு வையுங்க. அப்பால கற்பூரம் கொளுத்துங்க. அந்த கற்பூரம்– நெஞ்சு நிறைய சத்தியம்– போதும் எங்க சங்கிலிக் கருப்பனுக்கு!"

"அது எங்க இருக்குது ஆயிரம் அரிவாள் கோட்டை?"

"மருதைக்கு மேக்க வருசநாடு போற பாதையில இருக்குது. யாரைக் கேட்டாலும் சொல்லுவாங்க."

"நாங்களும் அந்த பக்கம்தான். விசாரிச்சுக்கிறோம்."

ராமக்கா அவனுக்கு நம்பிக்கை தந்தாள்.

"கவலைப்படாதீங்க... சாமி பார்த்துக்கும்" என்றான், அவனும்.

"சாமிதான் பாத்துக்கணும். வேற யாரு இருக்கா இனி எங்களுக்கு?" –ராமக்கா கசிந்தாள்!



# 2

**"சங்கிலிக் கருப்பு ஒரு சத்தியக்கார ஆவி.
தன்னை அண்டுனவன் அழுதா அதுக்கு தாங்காது.
அதோட ஆயிரம் அரிவாள் ஒண்ணு பறக்க
ஆரம்பிக்கும்!"**

**–நாட்டுப்புறப் பாடல்.**

இருட்டிக்கொண்டு வந்தது.

மேற்கில் ஒரு தங்க மாம்பழம் மாதிரி மூழ்கிக்கொண்டிருந்தான், சூரியன்.

அவனை ஒரு பார்வை பார்த்த 'ஆயிரம் அரிவாள் கோட்டை'ப் பூசாரியை ஆடி மாசக் காற்று அள்ளிக்கொள்ள முயலுவது போல தாக்கிக்கொண்டிருந்தது.

தலைமுடியெல்லாம் பறக்க, தீபங்களும் அந்த காற்று முன் எரியமாட்டாமல் அணைந்திருந்தன.

'டேபிள் டென்னிஸ்' மேசை கணக்காய் ஒரு கல்மேடை. அந்த மேடைக்கு நடுவில் ஆகிருதியான உருவத்தோடு அரிவாளை ஓங்கியபடி சங்கிலிக் கருப்பசாமி.

உண்மையாலுமே சங்கிலியால் அதன் கல் மேனியைக் கட்டிப்போட்டிருந்தார்கள். சங்கிலி இணைப்பில் ஒரு பூட்டும் தொங்கிக்கொண்டிருந்தது.

அந்த நாளில் கொடிய கைதிகளை இப்படித்தான் சங்கிலி போட்டு பூட்டி இழுத்துப்போவார்கள்.

அவர்களில் ஒருவன் அப்படியே சிலையான மாதிரிகூட இருந்தது.

பின்னால் சடை சடையாக விழுதுகள் ஆடும் ஆலமரம். அதில் ஒரு சிலர் புகுந்து ஒளிந்துகொள்ளலாம். அப்படி

ஒரு இண்டு இடுக்கு.

அந்த இடுக்குகளில் ஒன்றில் மட்டும் ஒரு தீபம் அணையாமல் எரிந்துகொண்டிருந்தது.

பூசாரியும் அது போதும் என்று நினைத்தவராக அந்த மரத்தையும், கல்மேடையையும் பதினொரு சுத்து சுத்தத் தொடங்கினார்.

இடையிட்ட விழுதுகளை எல்லாம் ஒதுக்கிவிட்டுக்கொண்டே கூப்பிய கரங்களோடும், திறந்த மார்போடும் சுற்றிச் சுற்றிவரத் தொடங்கினார்.

அந்தப் பிராந்தியத்தில் அவரைத் தவிர யாரும் இல்லை.

ஆலமரத்துக்கும், கல்மேடைக்கும் பின்னால் அந்த நாளைய ஒரு கோட்டை! அங்கங்கே இடிந்து இருந்த இடங்களில் செடி–கொடிகள் முளைவிட்டிருந்தன. சில இடங்களில் அந்தப் பிராந்தியத்தையே ஒரு வேட்டைக்காடாக கருதிப் பறந்தபடி இருக்கும் கழுகுகளின் கூடுகள்கூட தெரிந்தன.

பூசாரி பார்த்தபடியே சுற்றிவந்தார்.

அவர் பார்க்க– ஒரு கழுகு எங்கிருந்தோ ஒரு பாம்பை காலில் கவ்வியபடி பறந்து வந்துகொண்டிருந்தது.

அந்தப் பாம்பும்கூட திமிறலாக நெளிந்துகொண்டிருந்தது. பூசாரிக்கு அதைப் பார்க்கவும் கொஞ்சம் 'சுரீர்' என்றது.

மேற்கு வானத்து தங்க மாம்பழச் சூரியனின் பின்புறத்தில், சிறகை வீசிக்கொண்டு பாம்போடு கழுகு பறந்து வந்த காட்சி ஒரு படு வீரமான செயலாக, மிக ரசமான காட்சியாகக்கூட இருந்தது.

சரேலென்று கோட்டைச் சுவர் மேல் வந்து அமர்ந்த அதுவும் 'நொட் நொட்'டென்று தன் கோணல் அலகால், காலில் நெளிந்தபடி கிடந்த பாம்பின் உடம்பை கொத்திக் கிழிக்கத் தொடங்கியது.

பூசாரி எட்டாவது சுற்றை முடித்துக்கொண்டிருந்தார்.

ஆயிரம் அரிவாள் கோட்டைக் கோவிலில் இந்த மாதிரிக்



காட்சிகள் எல்லாம் சர்வசாதாரணம்.

ஆயிற்று– பூசாரி இன்னும் சில நிமிடங்களில் கிளம்பிவிடுவார். கிளம்பும்போது ஞாபகமாக கோட்டைக் கதவு முன்னாலும் சிறு துண்டு கற்பூரம் ஏற்றி ஒரு கும்பிடு. பின்புதான் புறப்பட்டாக வேண்டும்.

அதன்பின் மறுநாள் காலை எட்டு மணிக்கு வந்தால் போதும். சுற்றிலும் ஒரே மூங்கில் காடு. காற்றில் அது உரசியபடி போடும் சப்தத்தைக் கேட்டால் பயங்கரமாக இருக்கும்.

தைரியமாக நடக்க வேண்டும். நான்கு பெண்கள் மூக்கைச் சிந்தி அழுகிற மாதிரியும், உச்ச ஸ்தாயியில் விசும்பி விசும்பி அழுகிற மாதிரியெல்லாம் சப்தம் கேட்கும்.

அது மூங்கிலும், காற்றும் போடும் ரகசிய சண்டை என்று சிலரும், சங்கிலிக் கருப்பன் பழிவாங்கிய ஆவிகள்தான் அங்கே அப்படி கத்திக்கொண்டு சுற்றுகின்றன என்று பலரும் நம்பிக்கொண்டிருப்பதால் ஆறு மணிக்கு மேல் ஈ, காக்கைகூட அந்தப் பக்கம் நடமாடாது.

ஒற்றைப் பனைமரம் ஒன்றும் இருக்கிறது. சாதாரண உயரத்தைவிடவும் கூடுதலான உயரம், அதற்கு. நூறு வயதுக்குமேல் ஆகிறது. அதன் உச்சந்தலையில் பனந்தோகைகள் 'பம்'மென்று மண்டிக் கிடக்க அந்த மரமும்கூச வட்டம்கட்டி ஆடிக்கொண்டிருக்கும்.

சங்கிலிக் கருப்பு அதன் உச்சியில்கூட உட்கார்ந்தபடி தோட்டம் போடுமாம்.

தன்னை நினைக்காமலோ, மதிக்காமலோ அந்த பிராந்தியத்தில் யாராவது கால் வீசிக்கொண்டு நடந்தால் அவர்கள் தொலைந்தார்கள்.

அந்த மரத்தைக் கடக்கும்போது நிச்சயம் அவர்கள் மேல் கருதாகமோ, இல்லை தேளோ விழுந்து ஒரே போடு!

அதன்பின் பத்துப் பதினைந்து அடிகூட அவர்களால் நடக்க முடியாது. சுருண்டு விழுந்து நுரை கக்கிச்

சாகவேண்டியதுதான்!

இப்படிச் செத்துப்போனவர்கள் ஏகப்பட்ட பேர். பூசாரி அந்தப் பக்கமாய் வரும்போது செத்துப்போன உடம்பைப் பார்த்தே ஊகம் பண்ணிவிடுவார். அவர் இடுப்பில் சதா நேரமும் சங்கு ஒன்று தொங்கியபடி இருக்கும்.

அதை எடுத்து உடனே ஊதத் தொடங்கினால் அந்த சப்தம்கூட அருகே உள்ள கோட்டைப்பட்டி வரை கேட்கும். ஜனங்கள் 'திமுதிமு'வென்று திரண்டுவிடுவார்கள். அதன்பின் அந்த காட்டிலேயே அவர்களை இழுத்துப்போட்டு புதைத்து மேலே ஒரு எருக்கஞ்செடியையும் நட்டுவிடுவார்கள்.

அப்படி நடப்பட்ட எருக்குகளும் காடாய் வளர்ந்து, 'எருக்கமேனிக் காடு' என்று பேர்கூட பெற்றுவிட்டது.

அந்தக் காட்டையும் இருட்டுவதற்கு முன்பாகக் கடந்துவிடுவது நல்லது. இல்லாவிட்டால் ஆபத்துதான்!

பூசாரி சிலநேரங்களில் அந்த இடத்தைக் கடக்கத் தாமதமாகிவிடும்.

"டேய் பூசாரீ ஈ-ஈ... ஹி... ஹி... ஹி..." என்று நன்கு பழகிய நண்பனைப் போலெல்லாம் குரல்கள் காதில் கேட்கும்.

பூசாரி திரும்பிப் பார்க்காமல் நடந்து, அந்த இடத்தைக் கடப்பார்.

எவ்வளவோ நாகரீகம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்திலும் கோட்டைப்பட்டியின் இந்த எருக்கமேனிக் காடும், அரிவாள் கோட்டை சங்கிலிக் கருப்பனும் எல்லோரையும் மிரட்டிக்கொண்டிருப்பதால் யாரும் அந்தப் பக்கமாக தலை வைத்துக்கூட படுத்ததில்லை.

பூசாரியும் வேகவேகமாக கடந்துகொண்டிருந்தார். துப்புரவாக இருட்டியும்விட்டது. ஒற்றையடிப் பாதையாய் நீளும் மண்பாதையில் நடந்து ஊருக்குள் நுழையும் பிரதான கப்பிச் சாலையைத் தொடும்வரை உடம்பும், மனசும் அவருக்கும் உதறிக்கொண்டுதான் இருந்தன.



கப்பிச் சாலையை எட்டவும் ஒரு பெருமூச்சு. சாலையில் கிழக்குப்புறத்தில் இருந்து ஒருவன் மாட்டு வண்டியை ஓட்டியபடி வந்துகொண்டிருந்தான்.

'ஜலங்ஜலங்' என்று மாடுகளின் கழுத்து மணிச் சப்தம் பூசாரியை தேக்கி நிறுத்தியது.

வண்டி அருகே வரவும், கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தார்.

கோட்டைப்பட்டியில் வாழும் அவருக்குப் பரிச்சயமான பெரியசாமிதான் வண்டியில் இருந்தான். பின்னால் ஒரு இளம்பெண். சேலை முக்காடு போட்டுக்கொண்டு தலைகவிழ்ந்தவளாக அமர்ந்திருந்தாள்.

பூசாரி பார்க்க- பெரியசாமியும் "ஆரு பூசாரியா... ஏறுங்க வண்டியில" என்றான்.

பூசாரியும்பின்பக்கமாகசென்றுஒருஎம்புஎம்பி,பின்கட்டையில் தொடையைப் போட்டு அமர்ந்துகொண்டார்.

தனக்கும், பெரியசாமிக்கும் நடுவில் அமர்ந்திருந்த முக்காடு போட்ட பெண்ணைப் பார்த்தார்.

"ஆரு தாயி நீ- கோட்டப்பட்டியா?" -கேட்டார். அவளிடம் பதிலில்லை.

"உன்னைத்தான் விசாரிக்கறேன்ல?"

அவளிடம் விசும்பல் கூடிப்போனது.

"எலேய் பெரியா... என்னலே இது... ஆரு இது? எதுக்கு அழுவுது?" -அவனைப் பார்த்து கூவினார்.

"அத ஏன் கேக்கறீக... அது நம்ம மேலத்தெரு பொன்னன் பேத்தி. குராயூருக்கு வாழப் போனவ. புருஷன்காரன் இவளை உட்டுப்போட்டு, வேறு ஒருத்தியோடு கிடக்கானாம். தினம் இதுக்கு இடுப்புல மிதி."

பெரியசாமி விளக்கி முடித்தான்.

வண்டி மாட்டிடம் சீரான மணி சப்தம்.

"அடக்கெரகமே... அந்த நாயைப் பஞ்சாயத்துல நிக்க வைச்சு

டவுசரை அவுக்கலாம்ல?" -பூசாரி கோபப்பட்டார்.

"ஆமா... எந்தக் காலத்துல இருக்கீங்க நீங்க? அவன் தம்பி ஒரு போலீசு இனிசுபெக்டராம். பஞ்சாயத்து கிஞ்சாயத்துன்னு போனா விளங்குமா? ஊர்லையே காசுள்ள குடும்பம் வேற."

"பொறவு... இதுக்கு ஒரு வழிதான் என்ன?"

"இது நாண்டுகிட்டு சாவவேண்டியதுதான்" -வண்டிக்கார பெரியசாமி அடப்பமாய் சலித்துக்கொள்ள- அவள் மேலும் குமுறினாள். பூசாரிக்கு அது என்னவோ செய்தது.

"அழுவாத தாயி... அழுவாத..." -தேற்றப் பார்த்தார். பின், "நம்ம பொன்னனுக்கு இப்படி ஒரு பேத்தி இருக்கிறதே எனக்குத் தெரியாது. பெரியசாமி. என்னவோ போ... காலம் கெட்டுக் கிடக்குது. அந்த சங்கிலிக் கருப்பன்தான் கூலி கொடுக்கணும்" என்று ஒரு மாதிரி முடித்துக்கொண்டார்.

"ஆமா- அது கூலி கொடுத்து 'கிளுகிளு'ன்னு கிழிச்சிடப்போவுது. அதுவே ஒரு தண்ணிவண்டிச் சாமிதானே?"

பெரியசாமி எதனாலோ சாமியையே ஒரு வாருவாரினான்.

"எலேய்... வாயை மூடு. அதை சங்கிலியில் கட்டிவைச்சி இருக்குறோம். அதுபாட்டும் அத்துகிட்டு வந்துடப்போகுது."

"நல்லா வரட்டும்கறேன்... வந்து அந்த நாய்ப் பயலையும் பொராட்டி எடுத்தால்ல அது சாமி. என்னவோ பூசாரி... எனக்கு நம்பிக்கை செத்துப்போச்சு" என்றான், பெரியசாமி. வண்டியும் ஊருக்குள் நுழைந்துவிட்டிருந்தது.

பேருக்கு சில 'டியூப் லைட்'டுகள் எரிய- ஈசல்கள் பறந்துகொண்டிருந்தன.

அங்கங்கே குடிசைகளுக்கு வெளியில் கட்டிலைப் போட்டு மல்லாந்து கிடந்தார்கள் சிலர்.

சுருட்டுப் புகை வாசம் காற்றில் மூக்கைச் சிணுப்ப- கோட்டைப்பட்டிக்குள் நுழைந்த வண்டியில் இருந்து 'ணங்'கென்று கீழே குதித்தார், பூசாரி.

"சரி பெரியசாமி... அப்ப நான் வாரேன்" என்றபடி கிளம்பிச்



சென்றார்.

அந்தப் பெண் பார்த்துக்கொண்டே வண்டியில் அமர்ந்திருந்தாள்.

"நீயும் இறங்கு. அதான் ஊர் வந்துடுச்சுல்ல?" -பெரியசாமி அவளையும் பார்த்துக் கேட்டான்.

"இறங்கேன்... ஆமா, நம்ம சாமியோட சங்கிலியை அவுத்து உட்டா அது கிளம்பி வருமா?" அப்பாவித்தனமாக அவள் கேட்டாள்.

"என்கிட்ட கேட்டா? போய் அவுத்துவிட்டுப் பாரு. வருதான்னு பார்ப்போம்" -பெரியசாமி ஒரு தினுசாக பதில் சொன்னான்.

அவளும் மறுபேச்சு பேசவில்லை. இறங்கினாள்.

அவன் ஆச்சரியப்படும் விதமாய் வந்த வழி திரும்பினாள்.

"ஏய் புள்ள... எங்க திரும்பிப் போறே?" -கத்திப் பார்த்தான். அவனிடம் பதிலில்லை. அவள் இருளில் மறைந்துவிட்டாள்!

## 3

**"நூத்தி எட்டு கண்ணியால ஆன சங்கிலியால**
**கட்டி மூணு பானை சாராயத்தோட, முழுநீள அருவாவெச்சு**
**படைச்சு முன்னூறு வருஷம் முந்தி**
**கட்டிப்போட்ட சாமி... சங்கிலிக் கருப்பு!"**

**-நாட்டுப்புறப் பாடல்.**

அந்த ஐந்து ஏக்கர் நிலத்தில் நின்றுகொண்டிருந்தான், காளிங்கன். உழுதுபோட்டிருந்த மண். வரப்புகட்டி சீராக சதுர சதுரமாக பிரிந்து கிடந்தது. நல்ல புஞ்சைக் களரி. ஓரஞ்சாரத்தில் அங்கங்கே பிஞ்சு வேம்புகள்!

நடுவில் திட்டம் போட்டு தோண்டிய அந்த வட்டக்கேணி. அங்கேபோய் எட்டிப்பார்த்தான். கண்ணாடியில் பார்க்கிற மாதிரி

முகம் தெரிந்தது. 'சலீர்' என்று மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. ஜிலேபி கெண்டைகள். பட்டை உடம்பில் மினுக்கும் கருப்புப் புள்ளிகளோடு 'சினுசினு'வென்று வாலை விசிறிக்கொண்டு கூட்டம் கூட்டமாய் நீந்துவதைப் பார்க்க இன்பமாக இருந்தது.

தண்ணீரும் இளநீராய் தித்திக்கும். அப்படி ஒரு மண் வாகு. கருங்கல்லில் வட்டமாய் சுவர் எழுப்பி, கோவில் குளம் போலவும் இருந்தது.

காளிங்கன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு, தண்ணீரில் ஒரு கல் எறிந்து நீர்வட்டங்களை உருவாக்கிவிட்டு திரும்பினான்.

நைருதி மூலையில் வாஸ்து சாஸ்திரம் பார்த்து நட்டது போல புளியமரம்.

சிவ பூத கணங்களின் தலை போல அடர்த்தியாக இருந்தது சடை சடையாக அதில் புளியங்காய்கள்!

அவற்றைப் பார்த்தபடியே நடந்தான்.

மரத்தடியில் அடர்வாய் நிழல். 'ஏர்கூலர்' போட்டாற்போல காற்று. சட்டையைக் கழற்றி மரக்கிளையில் தொங்கவிட்டான். தோளையும் உதப்பி, கைகளை சுற்றினான். பக்கத்தில் ரெட்டியார் வயல். உழுதுகொண்டிருந்தார்கள்.

'இனி தானும் ஒரு ஓட்டு ஓட்டி தண்ணீர் தேக்க வேண்டியதுதான்' நினைத்துக்கொண்டான்.

"அண்ணே..." –குரல் கேட்டது. அவனது அடிவருடிகள் 'திபுதிபு'வென்று டிராக்டர் ஒன்றிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்கள்.

டிராக்டரில் மூங்கில் படல்கள்.

"என்னங்கடா... படல் வந்துடுச்சா?"

"ஆமாண்ணே... கம்பு நட்டு கட்டிடலாம்ல?"

"முதல்ல அதைச் செய்யுங்கடா" –காளிங்கன் சொல்ல,



வேலை ஆரம்பமானது. ரெட்டியார் வயலை ஓட்டி படலைக் கட்ட ஆரம்பித்தனர். அதைப் பார்த்துவிட்டு, வயலில் உழுதுகொண்டிருந்தவன் ஓடிவந்தான்.

கொஞ்சம் அத்துமீறி ரெட்டியார் வயலில் படலுக்கான மூங்கிலை நட்டுக்கொண்டிருந்தனர்.

"டேய்... டேய்... ஏன்டா எங்க நிலத்துல மூங்கில் நட்றீங்க? உங்க நிலத்துல நடுங்கடா" –கத்தினான், அவன்.

"போடா வெண்ணை..." –தள்ளிவிட்டுவிட்டு அடாவடியாக அவர்கள் வேலி கட்டும் வேலையைத் தொடர்ந்தனர். அவன் ரெட்டியாரைப் பார்த்து சேதி சொல்ல ஓடினான்.

"போ... போ... யாரை வேணா பாத்து கூட்டிகிட்டு வா. ஆனா, ஒரு பருப்பும் வேகாது" –கத்தினான் ஒருவன்.

ரெட்டியார், கோவிந்தசாமியிடம் வந்து புலம்பிக் கொண்டிருந்தார்.

"நீங்க இருந்தவரை ஒரு துயரமும் இல்ல... இப்ப அடாவடியா வேலி போடுறேன்னு என் நிலத்துலேயும் இறங்கிட்டாங்க."

"அதுக்கு நான் என்ன பண்ண? போங்க... போய் போலீஸ்ல புகார் கொடுங்க" –தலையைக் குனிந்துகொண்டே சொன்னார், கோவிந்தசாமி.

பார்த்துக்கொண்டே இருந்த பாண்டியன நெருங்கி வந்தான்.

"அப்பா... போலீசுக்கெல்லாம் போனா நியாயம் கிடைக்காது. கை காலை வாங்குனாதான் அவனுங்க வழிக்கு வருவாங்க" என்றான்.

கோவிந்தசாமி தன் மகனை கூர்ந்து பார்த்தார். சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க?"

"பொறவு... என்னமோ மம்பட்டியான் மாதிரி பேசறியே? நமக்கெல்லாம் ஏதுடா அவ்வளவு துணிச்சல்?"

"சரிதான்... உங்களோட சேர்த்துட்டீங்களா என்னையும்? பாருங்க வேடிக்கையை" -பாண்டியன் போய், வீட்டுப் பரணில் இருந்த அரிவாளை எடுத்து வந்தான். கோவிந்தசாமி விதிர்த்தார்.

"எலேய்... ஏன்டா இப்படி வெட்டியா குதிக்கறே? நிலத்துக்காக கோர்ட்டு படி ஏறின நான் இப்ப உனக்காக திரும்ப ஏறணுமா? என்னை நிம்மதியா இருக்க நீயும் உடமாட்டியா?" -பரிதாபமாக கேட்டார்.

அவனும் சற்று தயங்க ஆரம்பித்தான். ராமக்கா ஓடிவந்தாள்.

"எலேய்... தாயில்லாத புள்ளை- தப்பா வளர்த்துப்புட்டோம்னு ஊர் பேசவா? போடா உள்ற" -அலறினாள்.

அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை!

கோவிந்தசாமியோ சோர்வாக திண்ணையில் போய் படுத்துவிட்டார்.

பார்க்க பரிதாபமாக இருந்தது.

வேறு வழி?

## 4

**"வரிசையாக ஏழு மண் குதிரைகள்!**
**அதன்மேல் கிழமைக்கு ஒரு குதிரை என்று**
**ஏறிக்கொண்டு ஊருக்குள் வருமாம் கருப்பு.**
**அதில் செவ்வாயன்று வரும் செங்குதிரையின்**
**கனைப்பு சப்தம் எட்டுக்கல்லுக்கு கேட்குமாம்!"**

**-நாட்டுப்புறப் பாடல்.**

அந்த ராத்திரியில் துணிச்சலாக அந்தப் பெண் ஒத்தையடிப் பாதையில் நடந்து, வந்துகொண்டிருந்தாள். மறுநாள் பவுர்ணமி. முதல் நாள் நிலாவிடம் அணில் கடித்த



பழம் போல கொஞ்சம் சேதாரம்.

ஆனால், வெளிச்சத்தில் பழுதே இல்லை.

ஒற்றைப் பனை மரத்தைத் தாண்டும்போது அந்த மரத்தின் மேல் இருந்து யாரோ பார்க்கிற மாதிரி தோன்றியது.

எருக்கமேனிக் காட்டுக்குள் நுழைந்தபோது, காரே பூரே என்று சப்தமும் கேட்டது.

குடுகுடுவென்று ஒரு முயல் குட்டி ஓடினாற்போல கள்ளிச்செடிகளுக்குள் சலசலப்பு. யாரோ தள்ளிவிட்ட மாதிரி காற்றும் வேகமான வீச்சுடன் இருந்தது. அவளுக்கு பயமாகத்தான் தெரிந்தது.

இருந்தும் அவளுக்கு தூக்கம் அதைவிட கூடுதலாக இருந்தபடியால், அதை அவள் சட்டை செய்யவில்லை. விடுவிடுவென்று நடந்தாள்.

"ஹே... காத்தாயி... யீ... யீ..." -அவள் பெயரை யாரோ சொல்லி கூப்பிட்ட மாதிரிகூட தோன்றியது. திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

நல்லவேளை... எதிரில் அரிவாள் கோட்டையும், ஆலமரக் கருப்பு கோவிலும் தெரிந்து அவள் வயிற்றில் பாலை வார்த்தன. மரப் பொந்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கு மட்டும் அணையாமல் எரிந்தபடியே இருந்தது.

அதை வைத்துக்கொண்டு, முன்னே போய் நின்றாள். ஒரு ஆள் கருப்பாய் அரிவாளை ஓங்கிக்கொண்டு எதிரில் நிற்கும் தோரணையில் சங்கிலிக் கருப்பு.

ஆலமரத்தில் காட்டுப் பறவைகள் தங்கள் மொழியில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தன. ஒரே அலம்பல். அவளோ அதிலெல்லாம் புத்தியைவிடாமல் சங்கிலிக் கருப்பையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

நெடுநேரம் வரை நின்றுகொண்டிருந்தவள், திடும்மென்று ஆவேசம் வந்தவளைப் போல அங்கே நடப்பட்டிருந்த

அரிவாளைப் பிடுங்க ஆரம்பித்தாள்.

பறவைக் கூட்டமும் தங்கள் சலம்பல்களை சட்டென்று நிறுத்திக்கொண்டு, அவள்செயலை ஆச்சரியத்துடன் கவனிக்கத் தொடங்கின.

வெடுக்கென்று அதை ஒரு வழியாக பிடுங்கியவள்– "சாமி... நீ கல்லாப் போயிட்டே... காவலுக்கும் துப்பில்லாம போயிட்டேன்னு எல்லாரும் பேசிக்கிறாங்க. உன்னை கட்டிப் போட்டுட்டு எதைக் கேட்டு என்ன பிரயோசனம்? நான் உன்னை அவுத்து உடுறேன்.

புறப்படு... என்னை ஏமாத்திட்டு உல்லாசமா இருக்கிற என் புருஷன்ல இருந்து ஒரு பயகூட தப்பு பண்ணிட்டு நல்லா இருக்கக்கூடாது. நீ இருக்கேன்னு காட்டு. புறப்படு" –ஓங்கலான பிரார்த்தனைக் குரலோடு அந்த கல் சிலை மேல் உள்ள சங்கிலியின் பூட்டை தாக்கத் தொடங்கினாள்.

கண்ணி அவிழ்ந்த நொடி– எரிந்துகொண்டிருந்த விளக்கு 'மளுக்'கென்று அணைந்துபோனது.

மண்குதிரைகளில் ஒன்றும் சற்றே பக்கவாட்டில் சாய்ந்து விழுந்தது.

அதேநேரம் பின்புறமாய் உள்ள கோட்டையில் இருந்து பயங்கரமாய் ஒரு சப்தம் கேட்டது.

அவளுக்கு பயத்தில் மயக்கமே வந்துவிட்டது!


**ம**ணி பதினொன்று.

அவன் பாட்டிலின் கடைசிச் சொட்டு பிராந்தியைக்கூட விடாமல் குடித்துவிட்டு, அதைத் தூக்கி எரிந்தான். அருகில் அம்மணமாய் ஒரு பெண்.

அப்படியே அவள் மேல் பரவியவன், ஒரு அரை மணி நேரக் கழிப்புக்கு பிறகு எழுந்து நின்றான்.

"போதை இறங்கிடிச்சு புள்ள... இரு. வெளிய போய் சரக்கு வாங்கிட்டு வரேன்" என்று கிளம்பினான்.





"வேணாம், படு. காலையில பார்த்துக்கலாம்" என்றாள், அவள்.

"காலையிலயாவது... சாயந்திரமாவது... ஜோசப் கடை விடிய விடிய திறந்திருக்கும்டி. மூடுன கடையோட கதவை நொட்டு நொட்டுன்னு மூணுதடவை தட்டுனா ஒரு குவார்ட்டர் வேணும்னு அவனுக்கு தெரியும். எல்லாம் தொழில் ரகசியம். இரு, வரேன்" என்று சட்டையைக்கூட மாட்டிக்கொள்ளாமல் கிளம்பினான்.

"சரி சரி... சீக்கிரம் வா. நான் தூங்கிட்டா எழுப்பாதே" என்று அவனுக்கு விடை கொடுத்தவள், அப்படியே ஒரு போர்வையை இழுத்து போர்த்திக்கொண்டாள்.

இரவு நேரத்து தெரு. தூங்காத நாய்களின் அலைச்சல். தடுமாறிக்கொண்டே நடந்தான்.

அவ்வப்போது கார்கள், லாரிகள் அவனைக் கடந்து போயின.

தடுமாறி விழப்போனவன், சுதாரித்து எழுந்து நடந்தான்.

'வாழ்வே மாயம்... உலகே மாயம்' என்று பாட்டெல்லாம் வேறு பாடினான். ஒரே குழறல்!

அந்த இரவு நேரத்தில் கோவில் மாடுகளைத் தேடிப்பிடித்து லாரியில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். அதுவும் கார்ப்பரேஷன் லாரியில்.

ஒரு இடத்தில் அதிசயமாக வெள்ளைக் குதிரை ஒன்று நின்றுகொண்டிருந்தது.

ஆச்சரியத்துடன் அதை நெருங்கியவர்களைவிட்டு அதுவும் விலகி ஓடியது.

நன்கு வளர்ந்த ஊட்டமான குதிரை. அவர்களுக்கும் ஆவலாகிவிட்டது.

"டேய்... விடாதீங்க" என்று கார்ப்பரேஷன் லாரியில் ஏறிக்கொண்டு துரத்த– அந்தக் குதிரை, பந்தயத்தில் ஓடுகிற மாதிரி ஓடியது.



லாரியின் பின்னால் ஏராளமான கோவில் மாடுகள் நெருக்கமாக நின்றுகொண்டு ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக்கொண்டு, அவைகள் வேறு பலமாகக் கத்தின.

யாராவது பார்த்தால் ஏதோ ஒரு புதுவித வேட்டையே நடப்பதாக நினைத்துக்கொள்வார்கள். குதிரையும் சளைக்காமல் ஓடி ஒரு வளைவில் திரும்பியது– எதிரில் அந்தக் குடிகாரன்!

ஓடிவரும் குதிரையைப் பார்த்தவன் ஒரு நொடி அதிர்ந்துபோனான். அது அவனையும் கடந்து ஓடியது. அவன் கண்ணுக்கு மட்டும் யாரோ அதன் மேல் அமர்ந்திருக்கிற மாதிரியே தெரிந்தது.

"ஏய்ய்... இது என்ன கிண்டி மைதானமா?" என்று கிண்டலாகக் கேட்டு கத்தினான்.

கத்தியதாலோ என்னவோ போதையோடு அப்படியே சுருண்டு விழுந்தான். அதுவும், அந்த வளைவில் 'கார்ப்பரேஷன்' லாரியும் அப்போது வேகமாய் திரும்பியது. அடுத்த சில நொடிகளில் அவன் அலறக்கூட வாயில்லாதபடி அவனது வயிற்றுப் பாகத்தின் மேல் ஏறி லாரி சற்று தூரம் ஓடி நின்றது!

**கோ**விலுக்குள் நுழைந்த பூசாரிக்கு 'பகீர்' என்றது. மயங்கிக்கிடந்த அந்த பெண்ணும், சங்கிலி அவிழ்த்து கிடந்த சங்கிலிக் கருப்பசாமியும் அவரை ஒரு உலுக்கு உலுக்கினார்கள்.

பூசாரிக்கு புரிந்துவிட்டது.

முதல்நாள் இரவு 'பூட்டை உடைச்சுகிட்டு வந்துடப்போறேன்' என்று சொன்னதன் எதிரொலி.

"ஆத்தி... என்ன காரியம் பண்ணிப்புட்டே?" பதறியபடி இறங்கி அவளிடம் சுவாசம் இருக்கிறதா என்று பார்த்தார். நல்லவேளை அவள் மூச்சுக் குழலில் சரளமான காற்றுப்போக்கு.

முதல் காரியமாய் ஓடிச்சென்று கோட்டை முகப்பு அகழியில் தண்ணீர் மொண்டுவந்து தெளித்தார். இரண்டு, மூன்று முறை அதற்காக அகழிப் பக்கம் போனபோது அகழிக்கரையில் குதிரை

'லத்தி'களும், குளம்படித் தடயங்களும் தெரிந்தன.

ஆச்சரியமாகிவிட்டது.

திரும்பிப் பார்த்தார். ஒரு குதிரை பொம்மை சாய்ந்து கிடந்தது. அவருக்குப் புரிந்துவிட்டது.

பூசாரி குளம்படித் தடயங்களையும், குதிரைச் சாணத்தையும் பார்த்து ஒரு மாதிரி மிரண்டுபோனார். அப்படியே திரும்பி வந்தார்.

அந்தப் பெண் காத்தாயி மயக்கம் நீங்கியவளாக எழுந்து அமர்ந்த நிலையில் இருந்தாள்.

பூசாரி வரவும் ஒரு மாதிரி வெறித்தாள்.

"உனக்கு ஆனாலும் தைரியம்தான். காலகாலமாக கட்டியே போட்டிருந்த சங்கிலிக் கருப்போட கட்டை இப்படி அவுத்து உட்டுட்டியேம்மா" என்றார், படபடப்போடு. அவள் கண்களில் கண்ணீர் துளிர்க்க ஆரம்பித்தது.

"அழுவாத... செய்யக்கூடாததை செஞ்சுபிட்டே. இங்க இருக்கிற தடயங்களும், சாமி வேட்டைக்கு கிளம்பிடிச்சுன்னு ஆசகமா சொல்லுது. இனி என்ன நடக்கும்... ஏது நடக்கும்கிறது அந்த சாமிக்குதான் வெளிச்சம். ஆமா... ராத்திரி இங்க குதிரையில யாராவது வந்தாங்களா?" சந்தேகத்தோடு விசாரிக்கத் தொடங்கினார்.

"நல்லா யோசிச்சுச் சொல்லு."

அவள் தலையை ஒரு மாதிரி ஆட்டினாள். அது ஆமோதிக்கிற மாதிரியும் இருந்தது. மறுக்கிற மாதிரியும் தெரிந்தது.

"இப்படி தெளிவில்லாம தலையை ஆட்டுனா எப்படி தாயி... வாயத் திறந்து சொல்லு."

அவள் பார்வை உடனே கோவிலுக்கு பின்னால் உள்ள கோட்டையை நோக்கி சென்றது. மீண்டும் வெறித்தது.

"என்ன... அங்க பார்க்கறே? அதுதான் சங்கிலிக் கருப்போட கோட்டை. அங்கேயும் ராவுல போனியா?"



"இல்ல... அங்க இருந்து பெருசா சத்தம் கேட்டுச்சு."

"சத்தம்னா எப்படி... வெடி வெடிக்கிற மாதிரியா? இல்லை... குதிரை கிதிரை ஓட்ற மாதிரியா?"

"எனக்கு ஞாபகம் வரமாட்டேங்குது. ஆனா, அந்தச் சத்தம் மிரட்டலா இருந்துச்சு. நான் அதைக் கேட்டுத்தான் மயங்கி விழுந்தேன்."

"அடக் கொரகமே... குழப்பறியே தாயி!" பூசாரி புலம்பினார். குனிந்து தட்டில் விபூதி எடுத்து, நெற்றிக்கு பூசிக்கொண்டவர் - மிச்சத்தை வயிறு, கைகளில் எல்லாம் பூசிக்கொண்டார்.

பிறகு, சங்கிலிக் கருப்பைப் பார்த்து பெரிசாக ஒரு கும்பிடு. அருகில் மரக்கிளையில் உடுக்கு ஒன்றை மாட்டி இருந்தார். அதை தேடி எடுத்துக்கொண்டவர், "நீ இங்கனையே இரு. நான் வந்துடுறேன்" என்றவராக அந்தக் கோட்டையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

வதவதவென்று வளர்ந்து கிடந்த காட்டுக் கோரைகளும், மஞ்சள் அவுரிச் செடிகளும் அவர் நடக்கையில் காலடிபட்டு நசிந்துபோயின.

குடுகுடுவென்று இரண்டொரு ஓணான்கள் இடையிட்டு ஓட, கோட்டை மதில் சுவர் மேல் உடும்பு ஒன்று படுத்துக்கிடந்த நிலையில் மிகச் சாவதானமாக நிமிர்ந்து பார்த்தது. தன் இரட்டை நாக்கையும் கிட்டத்தட்ட இரண்டு அங்குலத்திற்கு வெளியே நீட்டி உள் இழுத்துக்கொண்டது.

திரும்பின பக்கமெல்லாம் புதராக காட்சியளித்த அந்த கோட்டை ஒரு காலத்தில் கோட்டைப்பட்டு ஜமீனுக்கு சொந்தமாக இருந்தது. இப்போது ஜமீனும் இல்லை. ஜமீன் வாரிசுகளும் இல்லை. அவ்வளவு பேரையும் சங்கிலிக் கருப்பு வேட்டையாடிக் கொன்றுவிட்டதாக ஒரு கதை ஊருக்குள் உண்டு.

அந்தக் கோட்டைக்குள் அதுவே வசித்து வருவதாகவும், அது கோட்டையைவிட்டு வெளியே வந்தால் ஊர் தாங்காது என்பதால் ஆயிரம் அரிவாள்களாலேயே கோட்டையைச் சுற்றி ஒரு மந்திர

வேலி எழுப்பி– அதைக் கட்டிப்போட்டு வைத்திருப்பதாகச் சொல்வார்கள். அன்று அப்படி நட்டு வைத்த அரிவாள்கள் பல அரிவாள்களை காலம் மழை, காற்று ரூபத்தில் வ[ழி] கொண்டுசென்றுவிட்டது.

சில அரிவாள்கள் மட்டும் எப்படியோ இன்னமு[ம்] துருப்பிடித்தும், இத்துப்போயும் அங்கங்கே தெரிகின்ற[ன]. இதுபோக நினைத்த இடத்தில் எல்லாம் நேர்த்திக்கா[க] செலுத்திய அரிவாள்கள் இறைந்து கிடந்தன.

பூசாரி அவ்வளவையும் பார்த்துக்கொண்டே அந்த இடி[க்] கோட்டை பிரதான திறப்பின் முன் போய் நின்றார்.

சாதாரணமாக அமாவாசை நாட்களில்தான் கள்ளு[ப்] பானைகளைக் கொண்டுபோய் அங்கே வைத்து ஒரு கும்பி[டு] போட்டுவிட்டு வருவார். அடுத்து, மறு அமாவாசைக்குத்தா[ன்] கள்ளுப்பானையோடு அங்கு போவார். அப்படிப் போகும்போது 'போனமுறை வைத்த பானை சில்லு சில்லாய் நொறுங்கி[க்] கிடக்கும்.

கருப்புதான் குடித்துவிட்டு உடைத்துவிடுகிற[து] என்பதெல்லாம் நம்பிக்கைகள். சிலநேரம் பானை உடையாம[ல்] கள்ளும் அப்படியே இருக்கும்.

அப்படி இருந்தால் கருப்பும் எழுந்திருக்கவே இல்லை என்[று] அர்த்தம்.

இந்த முறை பானை நொறுங்கிக் கிடந்தது.

உள்ளே எட்டிப் பார்க்க பயமாக இருந்தது.

உடுக்கையை கையில் எடுத்தவர், அந்த பிரதான வாசலிலே[யே] நின்றுகொண்டு அதை மெல்லத் தட்ட ஆரம்பித்தார்.

அப்படிச் செய்யும்போது கருப்பின் ஆவி வந்து அவர் உடம்பை ஆக்கிரமித்துக்கொள்ளும். அப்படியே ஓடிவருவார். அதன்பி[ன்] பேசுவது, நடப்பது எதுவும் அவருக்குத் தெரியாது.

எதிரில் இருப்பவர்கள் அவருக்கு நினைவு தெளிந்தபிறகு



சொல்லும்போதுதான் தெரியும்.

இந்த முறையும் பூசாரி அதற்காக வேண்டி உடுக்கையை ஒலிக்கத் தொடங்கினார்.

உடுக்கை ஒலிக்கும் சப்தம் மரத்தடியில் இருக்கும் காத்தாயி என்னும் அந்த பெண்ணுக்கும் கேட்டது. முதலில் மிக சன்னமாகக் கேட்டது. பிறகு மெல்ல மெல்ல அந்த சப்தம் அதிகரித்து– அவள் காதுக்கு மிக அருகில் கேட்கத் தொடங்க– பூசாரி கருப்பு இறங்கிய சாமியாக அவள் எதிரில் வந்து நின்று "ஏய்ய்..." என்று உச்சஸ்தாயியில் கொக்கரித்தார்.

"சாமி... வந்துட்டியா?" காத்தாயி கை கூப்பிட்டுக்கொண்டே கேட்டாள்.

"வந்துட்டேன் புள்ள... வந்துட்டேன். கட்டவுத்து எனக்கு விடுதலை தந்த உன கஷ்டத்தை நான் நீக்கிப்புட்டேன். நீ போ– இனி நான் எப்பவும் உன்கூடத்தான் இருப்பேன். நீ கூப்பிட்டா வருவேன். நீ இட்ட கட்டளையை சென்னிமேல வைச்சு செஞ்சு முடிப்பேன். இந்த சங்கிலிக் கருப்பன் இனி உன் அடிமை ஆத்தா– அடிமை..." பூசாரி துள்ளிக் குதித்தார். அவளோ பரவசத்தின் உச்சத்தில் இருந்தாள்.

"மலை ஏற விடு தாயி... என்னை மலை ஏறவிடு" என்று அவளைச் சுற்றியும் வந்தார். அவள் உடனே தட்டை எடுத்து கற்பூரம் கொளுத்தி, அவர் எதிரில் நீட்டினாள்.

**புலிக்கு அதிருஷ்டமிருந்தால்...**

**ஆதிவாசி இளம் பெண் ஒருத்தி ஓடிவந்தாள்.**

**"ஆபத்து... ஆபத்து... நம் அம்மா இருக்கும் குகைக்குள் ஒரு புலி புகுந்துவிட்டது. காப்பாற்றுங்கள், அப்பா" என்று அலறினாள்.**

**அதற்கு அப்பா சொன்னார்: "இதில் நான் என்ன செய்யமுடியும்? புலிக்கு அதிருஷ்டம் இருந்தால் தப்பித்துக்கொள்ளட்டும்."**

அதில் தீ சுவாலையுடன் எரிந்த கற்பூரத் துண்டை எடுத்து 'லபக்' என்று ஒரு விழுங்கு. அடுத்த விநாடி அவர் உடல் வெட்டப்பட்ட மரம் மாதிரி பக்கவாட்டில் சரிந்து விழுந்தது!

# 5

**"நெல்லுன்னா ஒரு கலம், பாலுன்னா பத்துபடி**
**ஆடுன்னா வெள்ளாடு, கோழின்னா சேவல்**
**நேர்த்தியின்னு சொல்லி, வார்த்தை மாறாம**
**கொடுத்தாக்கா கருப்பு நமக்கு விருப்பத்தோட**
**உதவி செய்வான்!"**
**-நாட்டுப்புறப் பாடல்.**

கொல்லையில், மாட்டிடம் பால் கறந்துகொண்டிருந்தான், பாண்டியன்.

இடம்தான் போய்விட்டது. மாடுகள் போய்விடவில்லை. பண்ணைகளுக்கு பால் ஊற்றி ஜீவிக்க வேண்டியதுதான் நிலைப்பாடு.

ஆனால், மாடுகூட தேவைக்கு கறக்காமல் நானும் ஒரு காளிங்கன் என்கிற மாதிரி அடிக்கடி உதைத்தபடி இருந்தது. அப்போது ஓடிவந்தாள், ராமக்கா.

நெற்றிக்கு நடுவில் மூக்கின் மேட்டுப் பகுதியில் வியர்வை தேங்கி அவள் படபடப்பை சொல்லாமல் சொன்னது.

"என்னா அத்தே... எதுக்கு இப்படி ஓடிவர்றே?"

"காரணமாத்தான் பாண்டி. உனக்கு நம்ம காத்தாயியைத் தெரியும்தானே?"

அவள் காத்தாயி என்றதும்தான் தாமதம் அவன் முகம் சுருங்கியது.

"அவளுக்கென்ன?" கசந்தவன் போல் கேட்டான்.



"...மகாலட்சுமியை அவ பாட்டன் கல்லுப்பட்டிக்காரனுக்கு ...கொடுத்து இருந்தான் இல்லியா?"

"...தான் தெரிஞ்ச விசயமாச்சே... இப்ப அவனுக்கென்ன?"

"...அவனை அருவாக்கோட்டை கருப்பு பலிவாங்கிடிச்சாம்!"

"அருவாக்கோட்டை கருப்பா... அது யாரு?"

"...ஒருத்தன்டா... ஆயிரம் அருவாக்கோட்டை சங்கிலிக் ...சாமியை உனக்குத் தெரியாது?"

"அப்படி ஒரு சாமி இருக்குதா?"

"இருக்குதாவா... நல்லா கேட்டே போ... சென்னையில் ஆட்டோ ...வனுக்கு தெரிஞ்சிருக்கு. உனக்கு தெரியலியாக்கும்?"

"அவனுக்கு தெரிஞ்சா எனக்கு தெரியணுமாக்கும்? என்ன ...தை நீ?"

"...ச்சுக்காதே... நல்லகாலம் பொறந்திடுச்சு. அந்தப் புள்ள ...லயே இப்ப அது இறங்கி இருக்குதாம். அவ கூப்பிட்டா ...ம். அவ சொன்னதைச் செய்யுமாம்."

"சரி... செய்யட்டும். நல்லது. இந்த மாடு சரியா பால் ...மாட்டேங்குது. அஞ்சு லிட்டர் பாலை பண்ணைக்கு ...தா சொல்லிப்பிட்டேன். பாரு... இரண்டு லிட்டர் ...ல. இதுக்கு ஒரு வழியைச் சொல்லு."

பாண்டியன், ராமக்கா பேச்சை கால் காசுக்குகூட பெரிதாய் ...க்கொள்ளவில்லை என்பது அவன் பாலைப் பற்றி ...லேயே தெரிந்துபோயிற்று. அவளுக்கும் அதனால் ...மான கோபம் வந்தது.

"...லேய்... பாலாடா இப்ப பெருசு? நான் அந்த காளிங்கன் ...துக்கு பால் ஊத்தறதுக்கு வழி கிடைச்சிடுச்சுட்டுங்கறேன். ...டான்னா நம்பாம பேசறியே?"

"தெரியுது அத்தை. நீ எந்த காலத்துல இருக்கேன்னுதான் ...ல. கருப்பு வந்துச்சு, பலி வாங்கிச்சுன்னு நீ பாட்டும் ...டே போனா அதை நான் நம்பவா?" அவனிடம் பதில்

## காந்தியின் ஆறுதல்

நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட்டின் கணவர் ரஞ்சித் பண்டிட், 1944-ம் ஆண்டு இயற்கை எய்தினார். அப்போது காந்தியும், நேருவும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்தனர். விஜயலட்சுமிக்கு காந்தி, அனுதாப கடிதம் ஒன்றை எழுதினார். அதில்-

"விஜயலட்சுமி, உனக்கு ஆறுதல் கூற பலரும் இத்தருணத்தில் வருவார்கள். அவர்களைப் போல



உன் கணவரின் மரணத்துக்காக நான் சோகம்கொள்ளமாட்டேன்.

ஏனென்றால், வீரமே உருவெடுத்த ஒரு தந்தைக்கு மகளாக- அறிவும், ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற அண்ணனுக்கு தங்கையாக- தைரியமும், வலிமையும்மிக்க கணவருக்கு மனைவியாக உள்ள உனக்கு ஆறுதல் கூறுவதற்கு அவசியமே இல்லை! உனக்கு வேண்டிய மனோதிடம் உன்னிடமே இருக்கிறது என்பதைநீ உணர்வாய்" என்று கூறி இருந்தார்.

-தேனி எஸ். மாரியப்பன்.

கோபம் மின்னியது.

"அப்ப நான் உளறுதேனா?

"நான் அப்படிச் சொல்லலை
நீ புரியாமப் பேசறே? இப்ப
எல்லாம் சாமிங்க கூப்பிட்
குரலுக்கு வந்தாக்கா இந்
நாட்டை கைலயே புடிக்
முடியாது அத்தை. அப்பா
நம்ம பிரதம மந்திரி, பாகிஸ்தா
தொல்லை தாங்கல கருப்பா
இந்தா முஷாரப்பை என்னான்
கேளும்பாரு. மூணு படை
அதுங்களுக்கு தளபதிங்
அப்பால லட்சக்கணக்கு
ராணுவம்னு யாரும் நமக்
தேவையே படமாட்டாங்
போ அத்தை... போய் எதாச்சு
ஆற சோலியா இருந்தாப் பா
பாண்டியன் குப்பையை
வித்து கூடையில் அள்ளுகி
மாதிரி அவளை, அவள
நம்பிக்கையை ஒரு குவியலா
குவித்து தன் அவநம்பிக்கை
என்னும் காற்றால் ஊதவு
செய்தான். அதில் தூசு, தும்புக
நன்றாகவே பறந்தன.

ராமக்காவுக்கும் ஏனட
அவனிடம் பேசினோம் என்
ஆகிவிட்டது. "உன்கிட்ட போ
நான் பேசுனேன் பாரு... இது எ
குத்தம்" என்று தன்னைத்தா

டிக்கொண்டாள்.

"இப்ப என்ன செய்ய
யம்கற? ஆஹா... அற்புதம்,
அதிசயம்னு நான் கன்னத்துல
போட்டுக்கணும்னு
சொல்றியா?"

"இது அதிசயம் இல்லாம
வேற என்ன?"

"சரி... நான் கேக்கற
கேள்விகளுக்கு பதில் சொல்லு.
அந்த கருப்பு எங்கே வந்துச்சு...
எப்படி வந்துச்சு... அதை
யாராவது பார்த்தாங்களாமா?"
பாண்டியன் கேள்விகளை
அடுக்கினான்.


ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.


அவனுக்கு எப்படி பதில் சொல்வது என்பது ராமாயிக்கே முதலில் பிடிபடவில்லை. பிறகு வெள்ளந்தியாக "அதெல்லாம் தெரியாது. அந்த குடிகார நாயி குடிச்சுப்பிட்டு நடுராத்திரியில ரோட்ல போய்கிட்டு இருந்துருக்கான். அப்ப ஒரு குதிரை... ஒரு குதிரை என்ன? நம்ம கருப்பச்சாமி ஏறி வர்ற குதிரையேதான். அது எதுப்பால வந்துருக்கு. மிரண்டுபோய் இந்த நாயி, பக்கமா ஒதுங்க- ஒரு லாரி அப்பப் பார்த்து வந்து அவன் மேல ஏறினிச்சாம். அவனும் அங்கேயே விழுந்து, பரலோகம் போய் சேர்ந்துட்டானாம்" ராமக்கா நடந்ததைக் கூறிவிட்டு தன் வெள்ளைச் சேலை முந்தியால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

"அப்ப லாரிதான் ஏறிடிச்சு... கருப்பு வந்து கொல்லலை. அப்படித்தானே?" பாண்டியனிடம் மடக்கல்.

"அட பொச கெட்டவனே. அந்த லாரி யாருங்கறே? அதான்டா கருப்பசாமி."

"அப்படியா? அப்ப அவர் குதிரையை
உட்டுட்டாராக்கும்?" அவனிடம் குறும்பு கொப்பளித்த

"வாயைக் கழுவுலே... அந்த லாரியிலகூட நெத்தி
கருப்பசாமின்னுதான் எழுதி இருந்துச்சாம்."

ராமக்கா சொல்லச் சொல்ல பாண்டியனுக்கு கோபமாகக்
வந்தது.

"ஏ அத்தே... சோலி பார்த்துக்கிட்டு இருக்கிற என்கி
வந்து கண்டத சொல்லி கோவப்படுத்தறே? போ அத்
போய் வேற சோலி இருந்தா பாரு."

"இல்ல பாண்டியா... நான் இப்ப என்ன சொ
வந்தேன்னா?"

"என்ன... என்னங்கறேன்?"

"காத்தாயி இப்ப தனிமரமா நிக்காய்யா. அவ
அவசரப்பட்டு அவங்க தாத்தன் அந்தக் குடிகார நாயி
கட்டிக்கொடுத்துப்புட்டான். என்ன இருந்தாலும் நீ ஆசைப்ப
பொண்ணாச்சே?" ராமக்கா தொட்டு நெருக்கி விஷயத்து
வருகிற மாதிரி இருந்தது.

"அதுக்காக?" பாண்டியன் படுவேகமாய் கேட்டவித
அச்சமூட்டுவதாக இருந்தது.

"ஏய்யா... ஏய்யா இப்படி கோவிக்கிறே? இப்ப அவ தாத்தா
தப்பு பண்ணிப்புட்டேன்னு தலையில அடிச்சுக்கிறான
அதனால..."

"உம் சொல்லு... அதனால?"

"அவளை நீயே..." ராமக்கா முழுவதுமாக சொல்லமுடியா
மென்று விழுங்கினாள்.

"என்ன கட்டிக்கச் சொல்றியா?" பட்டென்று கேட்டா

"ஆமாய்யா... அதுல ஒரு தப்பும் இருக்கிற மாதிரி என
தெரியல..."

"உனக்கு அறிவு இருக்குதா?" அவனிடம் சிற்



அதிகமாயிருது.

"ஏய்யா... இருக்கப்போய்தானே ஒரு முண்டகத்திக்கு வாழ்க்கை தாங்கறேன்."

"அதுசரி... அவ கணவன் செத்து இன்னும் முழுசா ஒரு நாள்கூட ஆவலை. உடனேயே கல்யாணப் பேச்சு பேசுறியே... யாராச்சும் கேட்டா என்ன நினைப்பாங்க?"

"ஒண்ணும் நினைக்கமாட்டாங்க. அவ தாத்தன்தான், 'காசு பணத்தை பாத்து நான் ஏமாந்துட்டேன். தாயி– தகப்பன் இல்லாத பொண்ணையும் வித்துப்புட்டேன். நல்லவேளை, அந்த கருப்பன் வந்து காப்பாத்திட்டான். என் பேத்தியை இனியாவது அவ விருப்பத்துக்கு வாழவைப்பேன்'னு சொல்லி அழுதானாம். அப்படின்னா என்ன அர்த்தம்?"

"துக்கத்துல அந்த ஆள் பேசறதுக்கும், நீ இங்க இப்படி பேசறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு அத்தை. காத்தாயியை நான் காதலிச்சேன். நிஜம். ஆனா, அவ என்ன காதலிச்சாளா... இல்லையான்னு எதுவும் தெரியாது. காலமும் வேற மாதிரி விளையாடிடிச்சு. இந்த நிலையில இப்படியெல்லாம் பேசறது தப்பு அத்தை.

அவ கணவனைக் கொன்னு பழிவாங்குன கருப்புகிட்டையே போய், 'நான் இனி என்ன பண்ணுவேன்?'னு கேக்கட்டும். அதுதான் சரி" பாண்டியன் அர்த்தபூர்வமாகவும், அதில் கொஞ்சம் இளக்காரம் கலந்தும் ஒரு மாதிரி பேசினான்.

மீண்டும் ராமக்கா முறைத்தாள்.

இனி இவனுடன் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று நினைத்தாளோ என்னவோ... அதற்குமேல் பேசாமல் திரும்பத் தொடங்கினாள்.

அவர்கள் இருவரின் உரையாடலையும் பாண்டியனின் அப்பா கோவிந்தசாமி கேட்டபடியே சற்று தூரத்தில்தான் படுத்திருந்தார்.

பாண்டியன் அவரைச் சமீபித்தான். "அப்பு..." கூப்பிட்டான்.

மிக சோர்வாக திரும்பிப் பார்த்தார். பார்வையி
சொல்லமுடியாத அளவுக்கு கலக்கம்.

"அத்தை பேசினதை எல்லாம் கேட்டுகிட்டு இருந்தீகளோ

"உம்..."

"வேடிக்கையா இல்ல?"

"அவ பேசுனது மட்டுமா... நம்ம பொழப்பும் இப் அப்படித்தானே தம்பி ஆயிடிச்சு?" அவர் சொன்ன பதி அவனைக் குத்தியது.

"நீங்க இன்னும் பழசையே நம்பிகிட்டு இருக்கீங்க? நில கைவிட்டுப் போயிட்ட கவலை உங்களை விடலை."

"என்னய்யா பண்ண? நான் சம்பாதிச்சதை தொலைச்சிருந்தா போவட்டும் கழுதைன்னு விட்டுருப்பேன். அது என் பாட்ட சொத்தாச்சே?"

"இந்தப் புத்தி அவனோடு சீட்டாடப் போகும்போது இருந்துருக்கணும்" பாண்டியனும் 'நறுக்'கென்று குத்தினான்

"இதையே எத்தனை தடவைடா சொல்லுவீங்க... பாக்கவறங்கள்லாம் இதையே சொன்னா நான் என்னதான் பண்ணுவேன்?"

அவர் குரல் கமறியது. அவனுக்கும் 'அடடா உணர்ச்சிவசப்பட்டுவிட்டோமே?' என்று வருத்தமாகியது.

"சரி அப்பு... விடு. எல்லாத்தையும் சம்பாதிச்சுக்கலாம். நான் இருக்கேன். மாடுகள் இருக்கு."

–ஒருமாதிரி சுதாரித்தான், பாண்டியன். அவருக்கு நம்பிக்கையும் தந்தான்.

"ம்... காத்தாயிக்குக்கூட அந்த சாமி ஒரு வழியைக் காட்டிடிச்சு ஆனா, எனக்கு காட்டாம போயிடிச்சே...?" கோவிந்தசாமியின் உதட்டில் மீண்டும் புலம்பல்.

"அப்பு... அப்ப நீங்களும் கருப்புதான் காத்தாயிக்கு நியாயம் தந்ததா நினைக்கிறீங்களா?" பாண்டியன் சற்று கோபமானான்.



"விடிய விடிய கதை கேட்டுப்பிட்டு சீதைக்கு ராமன் ...பாவான்னு கேட்டா எப்படிடா தம்பி? அந்த சாமி ...களை அந்தப் பொண்ணு துணிச்சலா உடைச்சுவிட்டா. ...வும் அவனுக்கு கடன்பட்டு, அவனை பலிவாங்கிடிச்சு. ... புரியலையா, உனக்கு?"

"சரி... சரி... நான் இனி எதுவும் பேசலை. பேசறதுல ...யோஜனமும் இல்லை" பாண்டியன் வேகமாக அங்கிருந்து ...ங்கினான்.

## 6

"ஒரே ஒரு குதிரை ஏறி ஓடிவா கருப்பா
இருகையில் வாள்பிடித்து ஓடிவா கருப்பா
மூணுமணிப் பகல்போல் ஒளியோடு வாப்பா
நாலுபக்கம் எதிரி உண்டு, துள்ளி ஓடிவாப்பா!"
–நாட்டுப்புறப் பாடல்.

அஞ்சு ஏக்கர் நிலத்தில்– குறிப்பாக புளியமரத்தடியில்தான் ...ந்தான், காளிங்கன். அருகில் இளநீர்க் காய்கள் பிராந்திக் ...போடு உருண்டு கிடந்தன.

காளிங்கனுக்கு கணபதி என்று வாசிப்புக்காரன் ஒருவன் ...ண்டு. ஊர்ச் செய்திகளை உடனுக்குடன் காளிங்கனுக்கு ...பரப்பு செய்வதுதான் அவன் வேலை. அப்படியே ஒரு ...டக்கு தண்ணியைப் போட்டுவிட்டு, ஐம்பதையோ இல்லை ...றையோ உருவிக்கொண்டு போவான். அது அவன் சொல்லும் ...தியைப் பொறுத்தது.

இன்றும் கணபதி ஓடிவந்தான்.

எவ்வளவு குடித்தாலும் காளிங்கனிடம் அலம்பலெல்லாம் இருக்காது. கொஞ்சம் மப்போடு நிமிர்ந்து பார்ப்பதில் மட்டும் ...வளவு வேகம் இருக்காது. கணபதியைப் பார்ப்பதிலும் இன்று

வேகம் இல்லை.

"காளி... விசயம் தெரியுமா?" கணபதி வாசிக்கத் தொடங்கிவிட்டான்.

"தலைப்புச் செய்தியை சொல்லுடா, வெண்ணை. விசயத்தைச் சொல்ல வந்துட்டு தெரியுமான்னா என்னாடா அர்த்தம்?"

"அது வந்து... காளி..."

"எது வந்து காளி?"

"கொஞ்சம் சுருதியை நானும்தான் சேத்திக்கறேனே?"

"எச்சலைடா நீ... நாயி... நாயி..." உதடு இரண்டும் திட்டித் தீர்த்தாலும், கை அவனுக்கான பிராந்தியை ஒரு தம்ளரில் ஊற்றியது.

கணபதியும் அதை ஒரே மடக்கில் குடித்துவிட்டு, காட்டம் தாங்காமல் 'ஆ... உஉ...' என்று முகத்தில் கோணல்களை உருவாக்கி காட்டிவிட்டு, "நம்ம காத்தாயியை தெரியும்தானே?" என்று நீட்டி முழக்க ஆரம்பித்தான்.

"எவடா அவ?"

"அதாம்ப்பா... நம்ம பொன்னன் பேத்தி."

"ஓ... அவளா? அவ புருஷனைக்கூட கருப்பசாமி வந்து பலி வாங்கிடிச்சாமே- அப்படியாடா?"

கணபதிக்கு புசுக்கென்று ஆகிவிட்டது.

"உனக்குத் தெரியுமா முந்தியே?"

"அதான் ஊர்பூரா பேசுதேடா... புதுசா எதாச்சும் இருந்தா சொல்லு?"

"சொல்லிடுவேன்... ஆனா, என்னை நீ அடிப்பே."

"இப்ப சொல்லாட்டிதான் அடிப்பேன். என்னா விசயம்... சொல்லு...?"

"நம்ம ராமக்கா இல்லை... ராமக்கா..."

"எவடா அவ...?"



"சரிதான்... இப்பல்லாம் போதைல பழைய தெளிவே உன்கிட்ட இருக்கிறது கிடையாது. நீ இப்ப எந்த நிலத்துல உக்காந்துகிட்டு இருக்கியோ அந்த நிலத்தோட சொந்தக்காரி..."

அடுத்தநொடி 'பளார்' என்று ஒரு அறை கணபதியின் கன்னத்தில் விழுந்தது. காதுக்குள்ளும் ராக்கெட்டுகள் பறக்க ஆரம்பித்தன.

"அட... என்ன காளி... உனக்கு புரியறதுக்காக சொன்னா அடிக்கிறியே...?"

"பின்ன என்னடா... இது இப்ப என் நிலம். கோர்ட்டுல தீர்ப்பே வாங்கிட்டேன்... தெரியும்ல?"

"அது தெரியாதாக்கும்... அங்கதான் விசயமே இருக்கு."

"என்னாடா அது விசயம்?"

"அது கோர்ட்டு தீர்ப்பு. நீ காசுக்கு விலைக்கு வாங்கிட்டியாம். ஆனா, ராமக்கா..."

"உம் சொல்லு... அடிக்கமாட்டேன் சொல்லு..."

"அந்த ராமக்கா, காத்தாயியைப் போய் பார்த்து, 'ஆத்தா உன் கருப்புகிட்ட சொல்லி காளிங்கன் உசுரையும் குடிக்கச் சொல்லு. அநியாயமா எங்க நிலத்தை அபகரிச்சுப்பிட்டான்'னு பிராது கொடுத்துருக்கா..."

கணபதி கன்னத்தில் கை வைத்தபடியே சொல்லி முடிக்க, காளிங்கன் முகத்தில் இளக்காரமாய் ஒரு புன்னகை வந்து அரும்பியது.

"என்ன காளி– நான் சொன்னதைக் கேட்டு உனக்கு கலக்கமா இல்லியா?"

"நான் எதுக்குடா கலங்கணும். இனிமே அவதான் கலங்கப்போறா... பிராதா கொடுத்திருக்கா? வெச்சுக்கிறேன்."

"காளி... நான் சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதே. அருவாக்கோட்டை கருப்பு ரொம்ப ஆபத்தான சாமி. அது இப்ப அந்த புள்ளமேல இறங்கி இருக்கு. பாத்துக்க..."

"அப்புறங்களா?" மிக இளக்காரமாகத் திரும்பிக் கேட்டான் காளிங்கன்.

"உன் தொனியே சரியா இல்லை, காளி.. நான் சொல்றதை நீ நம்பலேங்கற மாதிரி தெரியுது."

"எலேய்.." பதிலுக்கு ஒரு உதறலுடன் கூடிய அலட்டல் கணபதி நடுங்கிவிட்டான்.

"போடா.. போய் வேலையைப் பாரு..." காளிங்கன் வயலில் சிலர் உழுவதற்காக தயாராகிக்கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி கையைக் காட்டினான்.

கணபதிக்கு புரிந்துவிட்டது. காளிங்கன் வயலில் இறங்கி வேலை பார்க்கச் சொல்கிறான். கணபதி உடனே மே எமட்டினான்.

"காளி.. எனக்கு சந்தைக்கு போற வேலை இருக்குது. உன்கிட்ட விஷயத்தைச் சொல்லத்தான் நான் வந்தேன். என்னைப் போய் கோவிந்தசாமி வயல்ல இறங்கி வேலையைப் பாருன்னா என்ன அர்த்தம்?" கணபதி கேட்க, காளிங்கன் சிலிர்த்துக்கொண்டு எழுந்தான்.

எழுந்த வேகத்தில் கணபதியின் மார்பில் தனது டயர் செருப்புக் காலால் ஒரு உதை.

கணபதி அப்படியே மல்லாக்க புழுதி மண்ணில் விழுந்தான்.

"கருப்பசாமி.." என்று விழும்போது அவன் எழுப்பிய கூக்குரல் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. விழுந்தபின் திரும்பவும் எழுவதற்குள் காளிங்கனே குனிந்து அவனைப் பிடித்துத் தூக்கினான்.

"என்ன சொன்னே.. இது கோவிந்தசாமி நிலமா?"

"அது.. அது.. பழைய நினைப்புல சொல்லிப்புட்டேன்."

"பழைய நினைப்பா... எதுடா பழைய நினைப்பு? என் மண்ணுமேல நின்னுகிட்டு, என்னோட காசுல வாங்குன பிராந்தியைக் குடிச்சுப்பிட்டு, என்கிட்டையே கருப்பு சிகப்புன்னு



பூச்சிகாட்டுறியா நீ...? போடா... இன்னியில இருந்து ஒரு மாசத்துக்கு நீ என் நிலத்துல வயல் `வேலை பார்க்கறே. தண்ணி பாய்ச்சி, நாத்து நட்டு, களை எடுத்து, பூச்சிமருந்து தெளிக்கிறவரைக்கும் நீ இந்த இடத்தைவிட்டே போகக்கூடாது. ஓடுறா..."

சீற்றமான சீற்றம் காளிங்கனிடம். கணபதிக்கு சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. தெருக்கூத்தில் ஒரு சம்பவம் உடனே அவன் ஞாபகத்துக்கு வந்தது. நாரதர் வேடம் போட்ட ஒருவன், அசுரனிடம் வந்து 'நான் திரிலோக சஞ்சாரி' என்று ஆரம்பித்து மாட்டிக்கொள்வான். பதிலுக்கு அந்த அசுரன், நாரதரைப் பார்த்து தன் கால்- கையைப் பிடித்துவிடச் சொல்வான். அந்த ஞாபகம் வந்து, வசமாக மாட்டிக்கொண்டது தெரிந்தது. முழிமுழி என்று முழித்தான்.

"ஓட்டுடாங்கறேன்ல..." மீண்டும் அலறல், காளிங்கனிடம். கணபதி மிட்றுகட்டிக்கொண்டே நடந்தான். பேய்க்கு வாழ்க்கைப்பட்டவன், புளியமரத்தில் ஏறிய கதை...


அதே வேளையில் அந்த வயல்காட்டின் வரப்புமேல் காளிங்கனின் நெருங்கிய நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சில ரவுடிகள், ஒரு புதிய மனிதருடன் புளியமரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கலக்கமாய் இருந்த காளிங்கனைப் பார்த்தார்கள்.

"என்ன காளி... ரொம்ப 'டென்ஷன்'ல இருக்கிற மாதிரி தெரியுதே. ஆள் யார் தெரியுதா? நம்ம மைனர் மூர்த்தியோட சகலை. கோயமுத்தூர்ல பம்புசெட் வியாபாரம் பண்ணுறாப்பலயாம்."

சீட்டாட்டத்துல பெரிய கில்லாடியாம். இங்க 'கிளப்'பெல்லாம் இல்லையான்னு கேட்டார். எங்க காளிதான் இங்க கிளப்புன்னு சொல்லி இழுத்துக்கிட்டு வந்தேன். ஒருகை போடுவோமா?"

காளிங்கன் உடனே சாந்தமானான். வந்த மனிதரைப் பார்த்து நிதானமாக சிரித்தான். பிறகு, அவருக்கும் இளநீரில் பிராந்தியை





ஊற்றிக் கொடுத்தான்.

ஒரு பத்து நிமிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின் ஒரு ஜமுக்காளத்தை விரித்து கச்சேரியை ஆரம்பித்து விட்டார்கள்.

இதுதான் நேரம் என்று வயல்காட்டில் இருந்து கணபதி நைசாக நழுவ ஆரம்பித்தான்– 'பாவம், புதுசா வந்தவன் எதுல மாட்டப்போறானோ தெரியலியே?' என்கிற முனகலுடன்...

## 7

'ஒன்னரைக்கன்னு கன்னாயிரத்துக்கு
ரெண்டரை ஏக்கருல காடு ஒன்னு!
மூணரைச்செண்டு அளவுல, முப்பதடி ஆழத்துல
நாலரை ஏக்கருக்கு தண்ணி பாச்சலாம்– அப்படி
அஞ்சரைப் பெட்டியாட்டம் ஒரு கிணறு!
அம்புட்டும் வத்திப்போய், அடிமண்ணும் தெரியலாச்சு!
கும்பிட்ட கையோட கன்னாயிரமும்
போய் விழுந்தான் கருப்பு காலடியில
எம்புட்டோவழி இருக்க கருப்பு என்னடா பண்ணுமுன்னு
வம்பிட்ட சில மனுஷங்க ஏகடியம் பேசுனாங்க, ஆனா
அம்பாட்டம் கருப்பு வந்து
அடிமணலைத் தோண்டிப் போட்டு, பால்
சொம்பாட்டம் கிணத்தை ரொப்பி ஏகடியக்காரவுங்க
வாயை கிழிகிழின்னு கிழிச்சுப் பிடிச்சு.
கருப்பா, கொக்கா?"

–நாட்டுப்புறப் பாடல்.

அந்த நாட்டுப்புறப் பாடலை படித்த சங்கீதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சாதாரண வார்த்தை. ஆனால், அதற்குள்ளும் ஒரு சங்கிலி இணைப்பு– ஆழ்ந்த பொருள்!

கவிதைக்கு பொய் அழகு என்பார்கள். இதில்கூட கருப்பு வந்து

கிணற்றைத் தோண்டிப் போட்டு, அதை தண்ணீரில் நிரப்பியதாக ஒரு செய்தி. அநேகமாக அந்த கருப்பசாமியின் பெருமையைச் சொல்வதற்காக இதை எழுதிய நாட்டுப்புறக் கவிஞர் இந்த பொய்யை சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

அப்படியே அதை எடுத்துக்கொண்டு அப்பா ராகவன் எதிரில் போய் நின்றாள்.

"என்னம்மா?"

"அப்பா... இந்த நாட்டுப்புறப் பாடலை பாருங்க."

"நான் படிச்சுட்டேன்மா. என்ன விஷயம்? உன்னை ரொம்ப பாதிச்சிடிச்சா?"

"ஆமாம். கவிதைன்னா மொழி அறிவு வேணும்– இலக்கணம் தெரியணும்னுல்லாம் நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா, அதெல்லாம் அவசியமில்லைன்னு பளிச்சுன்னு சொல்றமாதிரி இருக்கு இந்தக் கவிதை."

"அதுதான் நாட்டுப்புறப் பாடல்களோட சக்தி."

"இந்தப் பாடலை ஏன் நம்ம பத்திரிகையில போடக் கூடாது?"

"போட்டுட்டாப் போச்சு..."

சங்கீதா முகத்தில், தன் கோரிக்கை ஒரு நொடியில் நிறைவேறிய மகிழ்ச்சி.

"ஆமா... கருப்பசாமி பத்தி இவ்வளவு உயர்வா எழுதி இருக்காரே இந்த கவிஞர். அந்த சாமி என்ன அவ்வளவு பிரபலமா?"

"இல்லையா பின்னே? நமக்கெல்லாம் பழனி முருகனும், திருப்பதி வெங்கடாஜலபதியும் எவ்வளவு ஓசத்தியோ அந்த மாதிரி கிராமத்து ஜனங்களுக்கு அவங்களோட காவல் தெய்வங்கள் ஓசத்திம்மா..."

"காவல் தெய்வமா?"

"காவல் தெய்வம்தான். நம்ம நாட்டு கிராமப்புறங்களை



அரசாங்கமும், போலீசுமா காப்பாத்திகிட்டு இருக்கு? இந்த மாதிரி சாமிங்கதானே?"

"இது உண்மையா?"

"முருகனும், திருப்பதியும் மட்டும் உண்மையாம்மா? நம்பிக்கைலதானே தெய்வங்களே இருக்கு?"

"அதுசரி. கிராமத்து ஜனங்க ஏன் முருகனையும், திருப்பதியையும் பெரிசா நினைக்கல?" –சங்கீதா ஒரு அசாதாரண கேள்வியை சாதாரணமாய் கேட்டாள்.

"அப்படி இல்லடா... அவங்களுக்கும் முருகன், திருப்பதி, அம்பாள், சிவன், விஷ்ணு போல எல்லாம் பக்தி உண்டு. ஆனா, இந்த கடவுள்கள் எல்லாம் ஆகம வட்டத்துல இருக்கிறவங்க. கொஞ்சம் அந்தஸ்தான பணக்கார சாமிங்கன்னு வெச்சுக்கோயேன்.

ஆனா கருப்பும், முனியும், சுடலைமாடசாமியும், அய்யனாரும் அப்படி இல்ல. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து நிக்கற 'எக்ஸ்பிரஸ்' சாமிங்க."

"சாமிங்கள்லகூட இப்படியெல்லாம் இருக்கா?"

"ஊருன்னு இருந்தா நகரம், கிராமம்னு இருக்கிற மாதிரிதான் இதுவும். எல்லாம் மனுஷன் தன் சவுகரியங்களுக்காக உருவாக்கிக்கிட்ட நம்பிக்கையோட வடிவங்கள்தானே இதெல்லாம்?"

"அப்ப வெறும் நம்பிக்கைதானா? மற்றபடி இல்லேன்னு நினைச்சா இல்லைதானா?"

"எல்லா சாமிகளுமே அப்படித்தானேடா?" மகளிடம் பாசத்தோடு இழைந்தார், ராகவன். நடுவில் சாத்தப்பன் தலை தெரிந்தது. அவர்கள் பேசிக்கொண்டிருந்த ஹாலில்– தலையில் கட்டி இருந்த துண்டை அவிழ்த்து இடுப்பில் கட்டிக்கொண்டு "நல்லா இருக்கீங்களா சாமி?" என்ற விசாரிப்போடு வந்து நின்றான்.

ராகவன் அவனைப் பார்த்ததும் உற்சாகமானார். "அடடே

சாத்தப்பனா? வாய்யா வா... எப்ப வந்தே?"

"இப்பதாங்க... எல்லாரும் நல்லா இருக்கிங்க்தானே?"

"எங்களவிடு. நீ எப்படி இருக்கே? இந்தத்தடவை அறுவடை எல்லாம் எப்படி?"

"பரவாயில்லீங்க. மழைதான் ஏமாத்திபிடிச்சு. பொய்யும் புனசுருட்டும் அதிகமாயிடுச்சு இல்லீங்களா? அதான் மழை பெய்யுவேனாங்குது?" –சாத்தப்பன் சன்னமாக வருந்தினான்.

"உக்காரு– உக்காரு..." –ராகவன் இருக்கையைக் காட்டினார். ஆனால், அவனோ கீழேயே உட்கார்ந்தான்.

"நீ முதல்ல நாற்காலியில் உக்கார்" அவர் வற்புறுத்தியும் கேட்கவில்லை. அவன் பார்வை சங்கீதா மேல் திரும்பியது.

"என்ன தாயி, பள்ளிக்கூடமெல்லாம் போறியா?" அந்தக் கேள்விமுன் அவள் சிரித்தாள்.

"ஏன் தாயி– சிரிக்கிற?"

"பின்ன சிரிக்காம... அவ பள்ளிக்கூடம் காலேஜின்னு போய்ப் படிச்சு முடிச்சு இப்ப என் பத்திரிகைல துணை ஆசிரியராவும் இருக்கா. நீ இன்னும் அவளைப் பள்ளிக்கூடம் போற பாப்பாவாவே நினைச்சா எப்படி?" அவன் உடனே வெள்ளந்தியாய் சிரித்தான். வழிந்தான்.

சாத்தப்பன்,ராகவனின் கிராமத்து நிலத்துக்கு குத்தகைக்காரன். ஆண்டுக்கு ஒருமுறை, இருமுறை என்று அவரை வந்து பார்த்து வரவு– செலவை ஒப்படைத்துவிட்டுப் போவான்.

அதற்காகத்தான் வந்திருக்கிறான்.

எளிய தோற்றம். கொஞ்சம் வெள்ளையை இழந்துவிட்ட பழுப்புவேட்டி, தொளதொளவென்று ஒரு கோடு போட்ட சட்டை, மூக்குப்பொடி, சாயம் ஏறிய தோள் துண்டு, கலைந்த தலைமுடி, கொத்துமீசை, தாடையிலும் வெள்ளிக்கம்பிகளை நட்டுக்கொண்ட மாதிரி சிரைக்காத ஒருவிதமான த்தாடி என்று அப்பட்டமான கிராமத்து ஆசாமி.



"என்னமோ கருப்பு, முனின்னு காதுல விழுந்திச்சுங்களே...?" என்று சிரித்தபடியே ராகவனைப் பார்த்தான்.

"அதுவா... அது ஒண்ணுமில்ல. நம்ம கிராமத்து சாமிங்களைப்பத்தி சொல்லிகிட்டு இருந்தேன்– நடுவுல நீயே வந்துட்டே" என்றார், ராகவன்.

"நம்ம ஊர் சங்கிலிக்கருப்பு பத்தியும் சொல்லுங்க. உங்களுக்கு விசயம் தெரியுமா?" –சாத்தப்பன் பீடிகை போட்டான். ராகவனும், சங்கீதாவும் ஆர்வமாக பார்த்தார்கள்.

"மூன்னூறு ஆண்டாக கட்டிப்போட்டிருந்த நம்ம சங்கிலிக்கருப்பை ஒரு பொண்ணு அவுத்து உட்டுட்டா. அது அவ மேலேயே இறங்கிடிச்சு. நம்ம பொன்னன் இல்ல பொன்னன்..." –சாத்தப்பன் கேட்க, ராகவன் தலை ஆடிற்று.

"அவனோட பேத்தி காத்தாயிதான் அந்தப் பொண்ணு."

"அப்படியா?" –ராகவன் அதை ஒரு சாதாரண செய்திபோலக் கேட்டார். அது சாத்தப்பனுக்கும் புரிந்து, அவன் முகம் உடனே மாறியது.

"என்ன சாமி...? சங்கிலிக்கருப்போட கட்டை துணிவா அவுத்துப்புட்டா அந்த பொண்ணுங்கறேன். நீங்க சாதாரணமா அப்படியான்னு கேக்கறீங்க?"

"இதோ பார்– உனக்கு என்னைப்பத்தி சரியா தெரியலைன்னு நினைக்கிறேன். இந்த சாமிங்களைப்பத்தி எல்லாம் எனக்கு பெருசா அபிப்ராயம் கிடையாது. நான் கருப்பசாமியை மட்டும் சொல்லலை. எல்லா சாமிங்களையும்தான். மனுஷங்களுக்கு பிடிக்கிறதுக்கு ஏதாவது ஒரு பிடி வேணும். அந்த எதிர்பார்ப்புல –ஒரு நம்பிக்கைல வந்ததுதான் இந்த சாமிங்க. இதுக்கு ஒருத்தர்மேல இறங்குது, ஏறுதுங்கறது எல்லாம் பிரமை. அதுவிடு, இந்தத்தடவை எத்தனை மூட்டை நெல் தேறிச்சு?"

"அட என்ன சாமி நீங்க– சங்கிலிக்கருப்பு ஒருத்தி மேல இறங்கி அவ கோரிக்கையை நிறைவேத்த– அவனோட புருஷனையே கொன்னு அவளுக்கு எவ்வளவு பெரிய சகாயம் பண்ணி இருக்குது.

அதைப் போய் சொரிஞ்சுக்கற ஒரு சாதாரண விஷயமாட்டம் நினைக்கறீங்களே? எனக்கு படபடன்னு வருதுங்க சாமி" –சாத்தப்பனின் பேச்சில் கனிசமாய் ஏமாற்றம், கோபம் எல்லாம் தொனித்தன. சங்கிதாவுக்கும் கொஞ்சம் 'சுரீர்' என்றது.

"என்ன சொன்னே..? சாமி அந்தப் பெண்ணோட புருஷனை கொன்னுடிச்சா?"

"ஆமாங்கம்மா.. அது என்ன லேசுப்பட்ட சாமியா? கும்பிட்டு விழுந்தா கூடவே நிக்கற சாமியாச்சே.."

"என்னப்பா சொல்றாரு இவர்?" சங்கிதா, ராகவன் பக்கம் திரும்பினாள்.

"விடும்மா.. எங்கையாவது எதாவது நடந்துருக்கும். இவங்க ஒருமாதிரி கூட்டிக்கழிச்சு அதை சாமி செயல்னு சொல்லுவாங்க. நாம சொல்றதில்லையா? 'எப்ப செஞ்ச புண்ணியமோ இந்த ஆபத்துல இருந்து தப்பிச்சோம்'னு.. அப்படித்தான்!"

"இல்ல சாமி இல்ல.. அப்படியெல்லாம் வாய் புளிச்சிச்சோ மாங்கா புளிச்சிச்சோன்னு பேசிடாதீங்க. இப்பக்கூட அது வேட்டுப்பட்டி சண்டியப்ப காளிங்கனை நான் தீர்த்துக்கட்டுறேன்னு சொல்லி இருக்குது. எண்ணி ஓம்பது நாள்.. ஓம்பதே நாள், அந்த சண்டியன் காளிங்கன் சாவப்போறான் சாமி."

சாத்தப்பன் மீண்டும் படபடத்தான். ராகவனுக்கு தர்மசங்கடமாகியது.

"சரி, நீ இப்ப எதுக்கு வந்தே? குத்தகைக் கணக்கு காட்டவா– இல்ல கருப்பசாமி புராணம் பாடவா?"

"கணக்கு காட்டத்தான் சாமி. ஆனா, நீங்க நம்பாம பேசவும் சுருக்குங்குது. தப்பு சாமி. ரொம்ப தப்பு."

"சரி.. தப்பாவே இருக்கட்டும். நீ குத்தகைக் கணக்கை எடு."

ராகவன் அவனை தன் வழிக்கு இழுத்தார். அவனும் அரைமனதாக கணக்கு வழக்கு பற்றி பேச ஆரம்பித்தான்.



சங்கிதா இடையில் நழுவினாள்.

வாசல்புறமாய் உள்ள தோட்டத்து ஊஞ்சலில் போய் அமர்ந்தாள். தீவிரமாய் சிந்தித்தாள். ஒரு பத்து நிமிட சிந்தனைக்கு பிறகு திரும்பி வந்தபோது, சாத்தப்பன் கணக்கு வழக்கை முடித்து ஒரு காப்பியும் குடித்திருந்தான்.

சங்கிதா வரவும், "நம்ம ஊட்டு காப்பி மாதிரி எங்கேயும் குடிக்க முடியாது தாயி" என்றான்.

காப்பியை கொடுத்த கையோடு அந்த கணக்கு வழக்கில் ராகவனின் மனைவி மாலினியும் கவனத்தில் இருந்தாள். அவன் பாராட்டவும் பெருமிதத்தோடு சிரித்தாள்.

"அப்பா ஒரு நிமிஷம்..." சங்கிதா இடையில் ராகவனோடு ஒதுங்கினாள்.

"என்னம்மா?"

"நம்ம சாத்தப்பன் சொல்றதைப் பார்த்தா, ஏதோ அதிசயமான ஒரு விஷயம் நம்ம கிராமத்துல நடந்தமாதிரி இருக்கு. எனக்கும் இந்த கிராமத்து சாமிங்களை எல்லாம் ஒரு சுற்று வந்து வித்தியாசமா ஒரு கட்டுரை எழுதினா நல்லா இருக்குமேன்னு தோணுது. என்ன சொல்றீங்க?"

"அதாவது சாத்தப்பன் சொன்ன கருப்பசாமி விஷயத்தை விசாரணை பண்ணப் போறேங்கறே...?"

"ஆமா..."

"வீண்! கிராமம்னாலே இப்படி பைத்தியக்காரத்தனமா பலவித நம்பிக்கைகள் இருக்கும். அருள்வாக்கு சொல்றேன், குறிசொல்றேன்னு அங்க ஏகப்பட்ட பித்தலாட்டங்களும் உண்டு. 'ஏமாறுகிறவன் இருக்கும்வரையில், ஏமாற்றுபவர்கள் இருப்பார்கள்'னு ஒரு பழமொழி உண்டுடா. கேள்விப்பட்டிருப்பியே..?"

கிராமத்துல எதையும் நம்பற பாட்டாளிகள் அதிகம். அதனால ஏமாற்றமும் அதிகம். நீ அதை மட்டம்தட்டி விழிப்புணர்ச்சி ஊட்டறதா இருந்தா சொல்லு. நான் சரிங்கறேன். இந்த சாமி

புகழ் பாடுறதுக்கோ, இல்லை அதை எடை போடுறதுக்கோ போகவேண்டாம்."

"இது முழுக்க முழுக்க நேரடி விசாரணை. எது உண்மையோ அதைத்தான் எழுதுவேன். அந்த கருப்பசாமி சவாலை என்னன்னுதான் பார்ப்போமே..?"

"உன் ஆர்வத்தைப் பாராட்டுறேன். வித்தியாசமான விஷயம்தான், இது. ஒருவித கொலை மிரட்டல்ங்கற ரகசியமும் இதுல இருக்கு! ஆனா, உன்னால சாமர்த்தியமா செயல்பட்டு மீண்டும் வரமுடியுமாங்கற சந்தேகமும் எனக்கு இருக்கு."

"என்ன டாடி... பொட்டச்சி உன்னால என்ன முடியும்னு கேக்காம கேக்கறீங்களா? சாத்தப்பன் விஷயத்தைச் சொன்ன

## டிரைவரின் திடீர் பற்று



கோவிந்தசாமி

தஞ்சையில் ஒரு மருத்துவமனையில் அமரர் ஊர்தி டிரைவர் ஒருவர் எப்போதுமே குடிபோதையில் இருப்பார். ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவார்.

ஒரு நாள் முதியவர் ஒருவர் (கோவிந்தசாமி) இறந்துவிட்டார். அவர் சுதந்திரப் போராட்டத் தியாகி. உடலை அந்த டிரைவர், வண்டியில் ஏற்றினார். செல்லும் வழியில் ஒரு கடை முன் வண்டியை நிறுத்தியவர், ஓடோடிச் சென்று மாலை வாங்கி வந்து உடலுக்கு போட்டார். தியாகியின் சொந்த ஊரான மன்னார்குடி கொண்டுபோய்ச் சேர்த்தார். பின்னர், உடலுக்கு வீர வணக்கம் செலுத்தினார்.

சிறிது நேரம் கழித்து அவருக்கு வண்டிக்கான பணம் கொடுக்க முன்வந்தார்கள். ஆனால், அவர் பணத்தை பெற்றுக்கொள்ளாமல் மீண்டும் தியாகியின் உடலுக்கு வீர வணக்கம் செலுத்திவிட்டு கலங்கிய கண்களுடன் புறப்பட்டார்.

அவருக்குள் ஏன் இந்த பற்று? அவர் ராணுவத்தில் இருந்தவர். அதான், தியாகி என்றதும் மதுவை மறந்து இத்தனை மரியாதை.

-ஜி. நேதாஜி, ராஜமன்னார்குடி.



உடனே அதுல ஒரு சுவாரசியமான விஷயம் இருக்குன்னு முடிவுக்கு வந்தது இந்த பொட்டச்சிதான். இந்த யோசனையை உங்களுக்குக் கொடுத்ததும் இந்த பொட்டச்சிதான். புரியுதா?" சங்கீதாவின் பேச்சில் அனலடித்தது.

"போச்சுடா... ஏன் பொட்டச்சி அப்படி இப்படின்னு நீயா கண்டவார்த்தைகளைப் பயன்படுத்தறே? நான் அப்படி எல்லாம் நினைக்கவே இல்லை. அதுக்காக உன்னை சினிமாவுல சண்டை போடுற ஒரு விஜயசாந்தியாவும் என்னால நினைக்க முடியாது. அதை நீ புரிஞ்சுக்கோ..."

"சரி... முடிவா என்ன சொல்றீங்க?"

"ரொம்பவும் விவேகம், தைரியம், புத்திசாலித்தனம், பொறுமைன்னு ஒரு கலவையில கவனிக்க வேண்டிய விஷயம் இது."

"அப்ப அதெல்லாம் என்கிட்ட இல்லேங்கறீங்களா?"

புரிஞ்சுக்கோம்மா... நான் சொல்லாததை எல்லாம் நீயா நினைச்சுகிட்டு கேள்வி கேட்டா என்ன அர்த்தம்?"

"இல்லப்பா... நான் ஒரு பொண்ணுன்னு தயங்கறீங்க நீங்க..."

"நிச்சயமா... மயிலிறகால யாராவது வாசலைக் கூட்டுவாங்களா? அது முட்டாள்தனம் இல்லையா?"

"இந்த உயர்வு நவிற்சியெல்லாம் என்கிட்ட வேண்டாம். நான் நல்ல திடமான தென்னை விளக்குமார்... புரிஞ்சுக்குங்க."

சங்கீதா விடமாட்டாள்போல் இருந்தது. ராகவன் அவளை வெறித்தார். பிறகு, ஒரு முடிவுக்கு வந்தார்.

"சரிம்மா... அங்கே போனா எங்க தங்குவே?"

"எதாவது லாட்ஜ்ல..." சொன்ன வேகத்தில் நாக்கைக் கடித்துக்கொண்டவள், "சாரி... சாரி... அது கிராமம்ல... லாட்ஜெல்லாம் இருக்காது. சாரி... சாரி..."

அவர் சிரித்தார்.

"உன்னை துணை ஆசிரியராக்கினது என் தப்பு. கல்யாணத்தைப் பண்ணி அமெரிக்காவுக்கோ, இல்லை ஆஸ்திரேலியாவுக்கோ அனுப்பி இருக்கணும். சரி விடு- சாத்தப்பனையேவிட்டு ஏற்பாடு பண்ணச் சொல்றேன்" விளையாட்டாக சொன்னபடி அவர் திரும்பினார். சாத்தப்பன் புறப்படத் தயாராக இருந்தான்.

"சாத்தப்பா- நம்ம சங்கீதாவும் இப்ப உன்கூட வரப்போறா. அவளுக்கு நம்ம கிராமத்துல ஒரு பத்து நாள் இருக்கணும்னு ஆசை. என்ன சொல்றே?"

"இதுல நான் சொல்ல என்னங்க இருக்கு? பாப்பா நம்ம ஊருக்கு வர்றதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். நம்ம வயக்காட்டுல இருக்கிற குடிசையில தங்கட்டும். நான் எல்லா சவுகரியமும் பண்ணித்தரேன்."

"ரொம்ப கவனமா பாத்துக்கணும். கூடவே இருக்கணும். அவ கன்னாபின்னான்னு கேள்வி கேப்பா. பதில் சொல்லணும். சொல்லுவியா?"

"அட என்னங்க நீங்க...! அது என் பொண்ணுங்க. என்ன கேட்டாலும் செய்வேன். அடிச்சாலும் வாங்கிக்கிறேன். போதுங்களா?"

ராகவன் உற்சாகமாக சாத்தப்பன் தோளில் கையைப் போட்டு இறுக்கி, ஒரு அணைப்பு அணைத்தார். அதில் ஏராளமான நன்றிகள் ஒளிந்துகொண்டிருந்தன.

## 8

"கொடுங்கோடையில ஒரு கடுங்காட்டுல
விடைக்கோழியா ஒரு கன்னிப்பொண்ணு.
படுபாடுபட்டு விறகும் சுள்ளியும் பொறுக்கி
விடுவிடுன்னு நடந்தா அந்த ஒத்தச் சிறுக்...
அட யாரு இவன்னு முழுபோதையில ஒரு துஷ்டப்பய!



மடத்தண்ணி பாஞ்சாப்புல பாஞ்சுபுடிச்சான்
அவ வளையல் கைய!
திடமான அவ திண்டாடிப்போனா! இருந்தும்
குடிகாரன் அவனைத் தள்ளி, கூப்பிட்டா கருப்பை...
நொடிகூட தாமதிக்காம கருப்பனும் வந்தான்
துடிப்பான அவன் குதிரைக் குளம்படிச் சத்தம்
டொக்... டக்... டொக்... டக்... டொக்... டக்...
ஆடிப்போன குடிகாரன் ஓடிப்போனான், கருப்பனும்
கூடிப்பேசி அவ கூடவே வந்தான்.
காவக்காரச்சாமி எங்க காட்டுக்கருப்பன், ரொம்ப
கோவக்காரச்சாமி எங்க காவல் கருப்பன்!"

–நாட்டுப்புறப் பாடல்.

ஏதோ வேலையாக இருந்தான், பாண்டியன்.

வீட்டுவாசலில் ஒரு வில் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

ராமக்காவுடன் காத்தாயி இறங்கிக்கொண்டிருந்தாள்.

அவர்களைப் பார்த்துவிட்ட கோவிந்தசாமி, ஓடிப்போய் காத்தாயி காலில் 'பொதேர்' என்று விழுந்தார். பாண்டியனை அது என்னவோ செய்தது. காத்தாயியோ மரம்போல விரைப்பாக எங்கோ பார்த்தபடி நின்றாள்.

ராமக்கா அவளை, "சாமி... உள்ளே வா சாமி" என்று கெஞ்சலாக கூப்பிட்டபடி முன்னால் நடந்தாள்.

காத்தாயியும் விரைப்பு குறையாமல் நடந்தாள். பாண்டியன் வெறித்துக்கொண்டே நின்றான். ஒரு காலத்தில் அவளைப் பார்த்தால் ஜொள்ளுவிடுவான். அவளும் அடித்துத் துவைத்த வெள்ளைத் துணிபோல அவ்வளவு பளிச் சென்று இருப்பாள்.

அங்கங்களில் கோணல் மாணலோ, அதுங்கல் பிதுங்கலோ இல்லாமல் படுசீரான உடற்கட்டும், அதற்கேற்ற உயரமும், மிக நீண்ட கூந்தலுமாய் சொக்கவிடுவாள். ஆனால், எல்லாமே அவள் திருமணத்தில் பறிபோய்விட்டது. இப்போது உடம்பில்

நிறைய இடங்களில் சூட்டுத் தழும்பு. கூந்தலையும் அந்தக் குடிகாரன் அறுத்துப் போட்டுவிட்டான். பேருக்கு கொஞ்சம் முடி. அதைக்கூட கட்டாமல் பாகவதர் கிராப்பு போல தோளில் புரளவிட்டிருந்தாள்.

பார்க்கவே பரிதாபமாக இருந்தது. பரிதாபப்பட வேண்டியவளைப் பார்த்து சாமி என்று காலில் விழுவதெல்லாம் மிக அதிகபட்சமாகத் தோன்றியது.

ராமக்கா அவளை வீட்டுக்கூடத்தில் பாயை விரித்து உட்கார்த்தி வைத்தாள். அவள் வந்த விஷயம் பரவி அக்கம் பக்கமும் முண்டத் தொடங்கிவிட்டது. அவள் காலில் 'பொதேர் பொதேர்' என்று விழுந்து, விபூதி வாங்கி இட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள்.

அவளிடம் பயங்கரமான இறுக்கம். பார்வை யாரையும் குறிப்பாக பார்க்காமல் எங்கோ வெறித்துக்கொண்டே இருந்தது.

பாண்டியனுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை.

வெளியேறக் காலெடுத்தான்.

ராமக்கா கவனித்து அவனை அழைத்தாள்.

"என்ன அத்தை?"

"எல்லாரும் கும்புடுறாங்க இல்ல. நீயும் கும்புடு."

"சரிதான். இரண்டு நாள் முந்தி அவளைக் கட்டிக்கடான்னே- இப்ப கால்ல விழுங்கறே. ஏன் அத்தை உன் புத்தி இப்படிப் போகுது?"

"அப்ப அவமேல சாமி இறங்கி இருக்கறது எனக்குத் தெரியாது, பாண்டி. பொறவுதான் தெரியும். இப்ப அதுக்கு நம்ம கஷ்டம் தெரியும். அந்த வெறும்பய காளிங்கனை, எண்ணி ஒம்பது நாள்ல தீர்த்துக்கட்டி நிலத்தை மீட்டுத் தரேன்னு சொல்லி இருக்குது சாமி."

"அடப்போ அத்தை- அவன் செத்தாலும் சொத்து அவன் வாரிசுகளுக்கும், மத்தவங்களுக்கும்தான் போகும். நமக்கெல்லாம்



வராது" பாண்டியன் சட்டத்தைச் சொன்னான். ராமக்கா சற்று மிரண்டாள்.

"என்ன பாக்கறே...? அவன் கோர்ட்டையே ஏமாத்துனவன். இந்த கோட்டைக் கருப்புல்லாம் அவனுக்கு சாதாரணம்."

"இப்படி நம்பிக்கை இல்லாம பேசினா எப்படி? இவ புருஷன்கூடதான் பெரிய சண்டியன். சாமி போட்டுத் தள்ளிப்புடலை?"

"மோட்டார்வாகனம் போட்டுத் தள்ளுனதை சாமின்னு நீ சொன்னா நான் கேட்டுக்கவா? ஏதோ காக்கா உக்கார பனம்பழம் விழுந்த கதையா நடந்த அதையெல்லாம் சொல்லி என் காதுல நீயும் பூ வைக்கப் பாக்காதே.

ஜெயிலுக்குப் போவுறதைப் பத்தி கவலைப்படாம அவனை வெட்டிப்போடுறதுதான் அவனை அழிக்க ஒரே வழி, புரிஞ்சுக்க..." பாண்டியன் அவளைத் தள்ளிவிட்டபடி கிளம்பிவிட்டான். அதுவரை எங்கோ வெறித்தபடியே இருந்த காத்தாயியும் அவன் வெளியேறுவதை மட்டும் மிகக் கூர்மையாக நிமிர்ந்து பார்த்தாள்.

மேட்டுப்பட்டி அப்படி ஒன்றும் பெரிய ஊரில்லை. இரண்டாயிரம் ஜனக்கட்டு இருந்தால் அதிகம். ஒரு மினி பஸ் மட்டும் பக்கத்து டவுனில் இருந்து அடிக்கடி ஊருக்குள் நுழைந்து முகப்பு ஆலமரத்தடியில் ஜனங்களை உதிர்த்துவிட்டு போய்க்கொண்டிருந்தது.

அப்படி வந்த மினி பஸ்ஸில் இருந்து சாத்தப்பனும், சங்கீதாவும் இறங்கினார்கள்.

சுடிதாரில் சங்கீதா தனியாக தெரிந்தாள். கையில், சக்கரம் பொருத்தப்பட்ட நவீன டிரெயிலர் கேரேஜைப் போன்ற சூட்கேஸ்.

அதைத் தூக்க முயன்ற சாத்தப்பனை தவிர்த்துவிட்டு, இழுத்துக்கொண்டு நடந்தாள், சங்கீதா. மேடும் பள்ளமுமான மண்தரை. நிறைய நெற்பதர்கள். சூட்கேஸை லகுவாக

இழுக்க முடியவில்லை.

திணறினாள்.

அதை ஊரும் கூடி வேடிக்கைப் பார்த்தது. முகத்தில் வியப்பு தெரிந்தது.

"கொண்டா தாயி. அதை இழுத்துக்கிட்டெல்லாம் இந்த ஊர்ல நடக்க முடியாது" என்று சாத்தப்பன் அதைத் தூக்கி தலைமேல் வைத்துக்கொண்டு நடந்தான். எதிரில் பாண்டியன் தென்படவும் சிரித்தான்.

பாண்டியனுக்குள் சங்கீதா ஆச்சரியமூட்டினாள். "யாரு சாத்தப்பா இது?" கேட்டான்.

"நம்ம தோட்டத்து முதலாளி மவ. பேரு..." சாத்தப்பன் அவளைப் பார்க்க...

"சங்கீதா... ஆமா... உங்க பேர்?" சங்கீதா நொடியில் சிநேகபாவத்துடன் அவனிடம் கேள்வியைப் போட்டாள்.

"பாண்டியனுங்க."

"ஆமாம் தாயி.. இவன்தான் நான் சொன்ன அந்த நிலத்தை தொலைச்சவரோட மகன்!"

"ஓ.. கோவிந்தசாமி சார் மகனா?"

சங்கீதா 'சார்' போட்டு பேசினது அவனுக்குள் மின்மினிக்களை பறக்கச் செய்தது.


"என்ன சாத்துப்பா..எங்க அப்பாரு இளிச்சவாய்த்தனமா நிலத்தை தொலைச்ச கதையை இவங்களுக்கும் சொல்லிட்டியா?"

"ஆமாம் பாண்டி... ஒம்போது நாள்னு கருப்பு கெடு விதிச்ச விசயத்தையும் சொன்னேன். அதான் ஒரு ஆர்வத்துல எல்லாத்தையும் பார்க்க கிளம்பி வந்துடுச்சி."

"அடக் கூறுகெட்டவனே... நீங்கள்லாம் திருந்தவே மாட்டீங்களா?"

"என்ன பாண்டி சொல்றே..."





"ஆமா... சுரைக்காய்ல உப்பு இல்லேங்கறேன். ஏங்க... பட்டணத்துக்காரங்க நீங்க. படிச்சவங்க. இவன் சொன்னதை நம்பியா வந்திருக்கீங்க?" அவன் கேள்வி அவள் பக்கம் திரும்பியது.

"அப்ப எல்லாமே சும்மா ஒரு உளறல்தான்னு சொல்ல வர்றீங்களா?"

"பின்ன என்னங்க? எந்தக் காலத்துலங்க சாமி இப்படி நல்லது, கெட்டதுக்காக வந்திருக்குது? அப்படி அது வரும்னு தெரிஞ்சா நாங்க எதுக்கு கோர்ட்டு, போலீஸ்னு போறோம்?" பாண்டியனின் 'லாஜிக்' அவளுக்கும் பிடித்தது. கொஞ்சம் பலமாகவே சிரித்தாள்.

"எலேய்... போய் வாயைக் கழுவு. நம்புனாத்தான் சாமி. அத முதல்ல தெரிஞ்சுக்கோ..." சாத்தப்பனுக்கும் கோபம் வந்தது.

"புடலங்கா... அடப்போ சாத்தப்பா. மேடம்... நீங்க நல்ல ஏமாறப்போறீங்க."

"அது இருக்கட்டும்... இவ்வளவு பிடிவாதமா இருக்கிற நீங்க எப்படி நிலத்தை ஒரு சூதாட்டத்துல விட்டீங்க?"

"ஒரு சின்ன திருத்தம். விட்டது நானல்ல. என் அப்பா."

"அவரைத்தான் எப்படி சீட்டாடப் போகவிட்டீங்க?"

நல்ல கேள்விதான். பாண்டியனே சற்று தடுமாறினான்.

"அதுதான் தாயி விதிங்கறது. கெட்ட நேரம்னு வந்துடுச்சின்னா புத்தியை மறைச்சுடும். இப்ப இவன் நம்பாம பேசல... அந்த மாதிரி."

"நீங்க சும்மா இருங்க. மிஸ்டர் பாண்டியன்! உங்ககிட்ட இருந்து பதிலே இல்லையே?"

"என்னத்தங்க சொல்றது? அவர் என்ன சின்னக்குழந்தையா? இல்ல, 'நான் இப்ப தண்ணி அடிச்சிட்டு சீட்டாடப் போறேன்'னு சொல்லிட்டுதான் போனாரா? சொல்லுங்க பார்ப்போம்."

"அதுசரி... அவரை அநியாயமா ஏமாத்திட்டாங்க.



அப்படிப்பட்டவங்க கோர்ட்டால மட்டும் எப்படி நேர்வழிக்கு வருவாங்க? சட்டம் எப்பவும் 'ரிக்கார்டு'களைத்தானே பார்க்கும்."

சாலையிலேயே அந்த விவகாரம் களைகட்டத் தொடங்கிவிட்டது.

"நல்ல கேள்விதாங்க. இந்தக் கேள்விக்கு பதிலை இப்படி நின்னுகிட்டு சொல்ல என்னால முடியாதுங்க. பிறகு சந்திக்கற வாய்ப்பு வந்தா விலாவரியா பேசலாம். ஊர்ல இருப்பீங்களா?"

"நிச்சயமா! ஒன்பது நாள் இருப்பேன்."

"ஒன்பது நாளா...? ஓ அந்தக் கணக்குல வர்றீங்களா? அதுல இரண்டு நாள் கழிஞ்சாச்சு. ஒரு வாரம்தான் இருக்கு. காளிங்கனும் லேசுப்பட்டவன் இல்ல. இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு அவன் ஊரைவிட்டே போயிட்டான்னு தெரிஞ்சுக்கிட்டேன். அவன் இப்ப மும்பைல இருக்கானோ, இல்ல... பெங்களூர்ல இருக்கானோ... யாருக்கு தெரியும்? ஆனா, கருப்பு இப்ப எங்க வீட்லதான் இருக்கு!"

"என்னது... கருப்பு உங்க வீட்ல இருக்கா?"

"ஆமாங்க... கருப்பு இப்ப அந்த காத்தாயி உடம்புல இறங்கி இருக்கிறதால்ல சொல்றாங்க. காத்தாயி இப்ப எங்க வீட்டுக்குள்ற இருக்கா. அப்படிப் பார்த்தா கருப்பு எங்க வீட்ல இருக்கறாத்தானே அர்த்தம்?" பாண்டியன் படுஜாலியாக சொல்ல, சாத்தப்பனுக்கு உடனே உடம்பு நடுங்கியது.

"எலேய் பாண்டி... காத்தாயி இப்ப உங்க வீட்டுலயா இருக்கா?" சாத்தப்பன் கேட்டுவிட்டு, வீதியில் பாண்டியன் இருக்கும் வீட்டைப் பார்த்தான்.

ஊர்க்காரர்கள் போய் வந்தபடி இருந்தார்கள்.

"ஆமாம்... போ...போய் இவங்களுக்கும் காட்டு... பார்க்கட்டும். போங்க மேடம். போய்ப் பாருங்க" பாண்டியன் ஏதோ வேடிக்கைப் பொருளை பார்க்கச் சொல்லுகிற தோரணையில்

சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

சாத்தப்பனும், சங்கீதாவும் நடந்தனர். சங்கீதா ஒரு இடத்தில் நின்று தன் 'கேமரா'வை வெளியே எடுத்து– தெருவை, தெருவில் திரியும் நாயோடும், மாடுகளோடும் கூடிய மனிதர்களை, ஓரம்கட்டி நிறுத்தப்பட்டிருக்கும் மாட்டுவண்டிகளை எல்லாம் சேர்த்து ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டாள்.

'கிளிக்க்க்...'

"தாயி– நம்ம வீட்டுக்கு போய் இந்த பொட்டியை வெச்சுட்டு வந்து பாப்போம் தாயி..."

"சரி சாத்தப்பா!"

## 9

"வாராண்டி வாராண்டி...
வனக் கருப்பன் வாராண்டி!
வெட்டரிவா பளபளக்க
வெள்ளக்குதிரை மேல ஏறி
கெட்டவங்க கொட்டமடக்க
துள்ளிக்குதிச்சு வாராண்டி!"

–நாட்டுப்புறப் பாடல்.

ரெட்டியார் தன் வயலில் வேலை நடப்பதைப் பார்த்தபடி இருந்தார். பக்கத்திலேயே காளிங்கன் ஆக்கிரமித்துக் கட்டியிருந்த வேலிப்படல்!

வேலிப்படலுக்கு அப்பால் காளிங்கனால் அபகரிக்கப்பட்ட கோவிந்தசாமியின் வயல், வெறிச்சோடிக் கிடந்தது.

ஈ காக்கை இல்லை!

அதற்கும் அப்பால் பாண்டியன் மட்டும் வந்தபடி இருந்தான்.



ரெட்டியாரும் பார்த்தார். அவன் நெருங்கவும் ஒருமாதிரி நெளிந்தார்.

"என்ன ரெட்டியாரே... காளிங்கனோட ஆளுங்க ஒருத்தனைக்கூட காணோம்?"

"தெரிஞ்சுகிட்டே கேட்டா எப்படி தம்பி..?"

"கோர்ட்டுக்கு பயப்படாதவன் சாமிக்கு பயந்து ஓடிட்டான்னா ஆச்சரியமா இல்ல!"

"அதுசரி.. அது என்ன லேசுப்பட்ட சாமியா. உங்க அத்தை கருப்புக்கு காசு வெட்டிப் போட்டுச்சாமுல்ல?"

"அது என்ன வேணா பண்ணும். கிறுக்குதானே?"

"அப்படிச் சொல்லாதே தம்பி. நம்மை மாதிரி ஏழை பாழைகளுக்கு சாமியைவிட்டா யார் இருக்கா?"

"அட போங்க ரெட்டியாரே... உங்க நிலத்துலயும்தான் ஆக்கிரமிப்பு பண்ணியிருக்கான். நீங்க என்ன கருப்புகிட்டயா போனீங்க?"

"போகலாம்னுதான் இருந்தேன்.. உங்க அத்தை முந்திகிட்டா. கருப்பும் கெடு விதிச்சிடுச்சுல்ல."

"அப்ப ஒம்பது நாள்ல காளிங்கனை கருப்பு பழிவாங்கிடுமா?"

"அப்படி பயம் இருக்கப் போயிதானே அந்த நாயி ஓடிப்போயிருக்கான். பாரு... உங்க நிலம் 'பா'ன்னு கெடக்கறதே!" –பாண்டியனும் பார்த்தான். ஐந்தரை ஏக்கரும் வெறிச்சோடிக்கிடந்தது. நடுவில் புளிய மரமும், கிணறும் பளிச்சென்று தெரிந்தன. சொல்லி வைத்த மாதிரி ஒரு காக்கை, குருவிகூட இல்லை.

"ஆமா எங்க இந்த பக்கம்?"

"வீட்ல இருக்கப் பிடிக்கலை. அதான் வெளிய வந்துட்டேன்."

"கட்டிக்க ஆசைப்பட்ட பொண்ணு கருப்பசாமியா

வந்து உக்கார்ந்து இருக்காளேங்கற கவலையா?" –ரெட்டியார் அவன் மனம் புரிந்துதான் கேட்டார்.

"இல்ல ரெட்டியாரே... எனக்கு இந்த கருப்பு, சிவப்பு மேலெல்லாம் நம்பிக்கை இல்லை. சுருக்கமா சொல்றேனே... நல்ல விஷயம் எது பேர்லையும் நம்பிக்கை இல்லை. வலுத்தவங்களுக்குதான் இங்க காலம். அடிக்கு அடி, வெட்டுக்கு வெட்டு! வெட்டத் தெரிஞ்சா பொழைக்கலாம். இல்லாட்டி, இருக்கிறதைக் கொடுத்துப்புட்டு என்னை மாதிரி என்ன பண்ணுறதுன்னு தெரியாம திரிய வேண்டியதுதான்."

"அப்படி எல்லாம் அலுத்துக்கிடாதே. கோர்ட்டும், போலீசுமா இம்புட்டு பெரிய பூமியை காவல் காக்குது? மனுஷங்களுக்குள்ள இருக்கற பயமும், கட்டுப்பாடும்தானே வாழவெச்சுகிட்டிருக்குது." "சரி– விட்டா நீங்க எதாவது ராமாயணத்தைச் சொல்லி என்ன குழப்புவீங்க. நான் வர்றேன்."

"தைரியமா போ... இன்னும் ஏழே நாள்... அந்த காளிங்கன் என்ன ஆவறான் பார்."

"ஆக நாமகூடி எதுவும் செய்யப் போறதில்லை. ஒரு பொட்டச்சியை இப்ப நம்ப ஆரம்பிச்சாச்சுன்னு சொல்லுங்க" இளக்காரமாய் சொல்லியபடியே நடந்தான். எதிரில் பூசாரி வேறு வந்துகொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும் சிரித்தான்.

"என்ன பாண்டியா சிரிக்கறே?"

"சிரிக்காம... இனிமே உங்க காட்டுல மழைதான்."

"என்ன சொல்றே நீ?"

"சும்மா இருந்த காத்தாயியை 'நீதான் இனி கருப்பு'ன்னு ஏத்திவிட்டுப்புட்டீங்க. இப்ப அவ முன்னாடி ஒரு கூட்டமே போய் விபூதி வாங்க ஆரம்பிச்சிடிச்சு. நல்லாவா இருக்கு பூசாரி. பாவம், அந்தப் பொண்ணு."

"அடக் கெரகமே– அவ போய் கருப்பை அவுத்து உட்டதுக்கு





"அவர்கிட்ட என்ன தகராறு?"
"செல்போனில் 'மிஸ் கால்' மாதிரி 'கிஸ் கால்' கொடுக்க முடியுமான்னு கேக்கிறார்."

–ரா.சு. லீலா விஜய், மதுரை.



"என்னடி, இது? வேலைக்காரியோடு வம்புச் சண்டை போட்டுகிட்டு இருக்கே?"
"உங்கம்மாஊருக்குப்போனதாலஎனக்கு பொழுதே போகமாட்டேங்குதுங்க!"

–அப்துல், திருச்சி.



"என்னங்க! சுடுகாட்டுல ஓட்டல் ஆரம்பிச்சி இருக்கீங்க?"
"என்ன பண்ணுறது? எல்லோரும் ஆவி பறக்க இட்லி கேட்கிறாங்களே!"

–ஸ்ரீராம், சாத்தூர்.

# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600007.**

## தேன் வடியும் பூ

இனிமையான வசீகரமான காதல் கதை. "பனி வடியும் பூக்கள்" தேன் வடியும் பூவாய் இனித்தது.

**த. நஸ்ரீன் பாஷா, மங்களூர்.**

மணிமாலாவின் கைவண்ணத்தில். தாய்மையின் புனிதத்தை எடுத்துக் கூறியது. காயத்திரி, தன் காதல் கணவன் தவறு செய்தபோது, அவனுக்கு 'உயிரின் வலியை' உணர்த்தியது சரியே!




**ஜி. மனோகரன், கச்சிராயபாளையம்.**

மரணத்தின் வலியை முகுந்தனுக்கு காயத்திரி உணர்த்தியவிதம் தவறாக தெரிந்தாலும், ஒரு குழந்தையை இழந்த தாய் என்ற முறையில் அவள் செய்தது நூற்றுக்கு நூறு சரியான முடிவே.

**சாஸ்திரிநகர் எஸ். இராஜு.**

'பனிவடியும் பூக்கள்' நாவல் எங்கள் இதயத்தை ஆக்கிரமித்துக்கொண்டது.. விறுவிறுவென படித்து முடித்தேன்.

**கே. அம்பிகா,**
**அருப்புக்கோட்டை.**

கதை சுவையாக தொடங்கி, ஜோராய் முடிந்தது. படிக்க படிக்க ஆவல் பெருக்கெடுத்தது. 'இன்பங்கள் சேர்ந்து வருவதில்லைதுன்பங்கள் தனித்து வருவதில்லை' என்ற பழமொழியை அப்படியே எடுத்துக்காட்டியது.

"மத்தாப்பு கனவுகள்' சிறுகதை பலே!

**செந்தில்குமார், சிவகாசி.**

'வாத்தியார்', 'மத்தாப்பு கனவுகள்' -இரண்டு சிறுகதைகளும் நல்ல படிப்பினையை ஏற்படுத்தின.

**அ. சேகர், புதுக்கோட்டை.**

சிரிப்பு, துணுக்குகள் இதழுக்கு தோரணம் கட்டின.

**தமிழ்ச்செல்வி, மந்தைவெளி.**



நான் என்னய்யா பண்ணுவேன்?"

"எல்லாத்துக்கும் ஒரு பதில். தான் தெரியாமத்தான் கேக்கறேன். ஒரு பொட்டச்சி வந்து அவுத்து விடுற நிலையில் இருக்கிற ஒரு சாமியா காளிங்கன் மாதிரி மூர்க்கப் பயலுகள பிடிச்சு வெட்டப்போவுது?"

"நீ நாத்திகம் பேசறே– புரியாமலும் பேசறே. சங்கிலிங்கறது யானையைக் கட்டிப் போட்ட மாதிரியான விசயம் இல்ல. அது ஒரு சத்தியக்கட்டு. இதை அவுத்து விடுறவரை நீ யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாம– வாரபோறவங்களை மிட்டாம கொள்ளாம இருந்து எல்லாருக்கும் நல்லது செய்யணும்கறதுக்காக போட்ட விலங்கு. அதுவும் சத்தியத்துக்கு கட்டுப்பட்டுத்தான் அடங்கி இருந்துச்சு. அதைப் புரிஞ்சுக்கோ_"

"ஓ– இப்படி ஒரு விளக்கமாக்கும். இதை யார் செஞ்சது?"

"நான் சொல்றது முன்னூறு ஆண்டுக்கு முந்தின கதை."

"கதைன்னாலே கற்பனைதானே பூசாரி."

"ஆமா... நீ ஏன் இப்படி எகனைக்கு மொகனையாவே பேசறே... அதை நம்பு பாண்டியா இல்லாட்டி காத்தாயி புருஷன் காலாவதி ஆகியிருப்பானா?"

"இதோ பாருங்க.. சாமின்னா அவனைத் திருத்தி, அவனோடு வாழவெச்சுருக்கணும். அப்ப அது நல்ல விசயம். கொன்னு அழிக்கறது எப்படி நல்ல விசயமாகும்?"

"சாமி மனசை நாம புரிஞ்சுக்க முடியாது எப்படியோ அது கொன்னுச்சின்னு ஒத்துக்கிட்டியே. அந்த மட்டுல சந்தோஷம்."

"தப்பு பூசாரி.. அது சாமி இல்லேன்னு சொல்லத்தான் நான் அப்படிப் பேசுனேன்."

"அப்ப அவன் தானாக செத்தானாக்கும்?"

"விபத்துல ஆயிரம் பேர் சாவறாங்க. அதை சாமியோடு முடிச்சுப் போட்டுப் பாக்கறது முட்டாள்தனம். புரிஞ்சுக்குங்க."

"முடிவா நீ என்னதான் சொல்றே?"

"கருப்பு வரும், காப்பாத்தும்னு நம்பி ஏமாற வேண்டாம்கறேன்."

"அந்த காளிங்கன் பயலே பயந்து ஓடுனதைப் பார்த்துமா இப்படி பேசறே?"

"அவன் தப்பு பண்ணுனவன். ஒருவேளை நீங்க சொல்றமாதிரி நடந்துட்டா என்ன பண்ணுறதுன்னு நினைச்சு பயத்துல ஓடி இருக்கலாம். பார்த்துகிட்டே இருங்க. ஒரு மாசம் கழிச்சு திரும்பி வருவான். 'எங்கடா என்னை ஒன்பது நாள்ள வெட்டறேன்னு சொன்ன கருப்பு'ன்னும் கேப்பான். முன்னைவிட அதிகம் அடாதுடி பண்ணுவான். அப்ப எங்க போய் மூஞ்சியை வெச்சிக்கிறீங்கன்னு பாக்கறேன்" பாண்டியன் பொரிந்து தள்ளிவிட்டு நடந்தான். பூசாரியும் யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

## 10

"ஒரு நாக்கு... ஒரு சொல்லு...
உள்ளவன்தான் மனுஷன்.
அந்த ஒரு சொல்லுக்காரனுக்கு
உற்றவன்தான் கருப்பன்!
வெள்ளந்தி மனசிருந்தா
வெள்ளமாட்டம் ஓடிவந்தே
உள்ளம் குளிர வைப்பான் கருப்பன்.
கள்ளத்தனம் பண்ணாக்கா
கொள்ளி வைப்பான் கருப்பன்."

–நாட்டுப்புறப் பாடல்.

அமைதியாக அமர்ந்திருந்தாள், காத்தாயி. சுற்றி ஊரே கூடியிருந்தது. நாட்டாமை, பஞ்சாயத்து தலைவர் என்று அதிகாரவர்க்கமும் அங்கே அவள் முன் அமர்ந்திருந்தது.

எல்லோர் நெற்றியிலும் பட்டை பட்டையாக விபூதி.



சாத்தப்பனோடு உள்ளே நுழைந்த சங்கீதா முதல் முறையாக காத்தாயியை அப்போதுதான் பார்க்கிறாள். கருப்புச் சேலையும், தலைவிரி கோலமுமாக சிலையாட்டம் அமர்ந்திருந்தாள்.

அவள் நெற்றியிலும் விபூதி பரவி இருந்தது. கண்களிலும் ஒருவித தீட்சண்ணியம்.

'கிளிக்...' சங்கீதா தன் கேமராவுக்கு வேலை கொடுத்து, அவளைப் புகைப்படம் எடுத்தாள்.

'பிளாஷ்' வெளிச்சம் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

புருவம் வளைந்து 'யார்' என்ற கேள்வியும் விளைந்தது.

"நம்ம முதலாளி மக.. பட்டணத்துலேயே பொறந்து வளர்ந்த பொண்ணு... அதாங்..."

–சாத்தப்பன் சமாளித்தான்.

"உக்காருதாயி.." –என்றார் தலைவர். சங்கீதாவும் ஒரு இடம் பார்த்து அமர்ந்தாள். ராமக்காவும், கோவிந்தசாமியும் எல்லோருக்கும் குடிக்க பானகம் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

ஊதுபத்தி புகைந்துகொண்டிருந்தது.

"இப்படி இங்க வந்து குந்தியிருந்தா எப்படி கருப்பா...? நாங்க என்ன செய்யணும்னு சொன்னா செய்யறோம்" –என்று நாட்டாமை மெல்ல பேச்சுக்கொடுத்துப் பார்த்தார்.

காத்தாயி எதுவும் பேசாமல் அமர்ந்தபடியே இருந்தாள்.

"அந்த எடுபட்ட பய உனக்கு பயந்து ஊரைவிட்டே ஓடிட்டான். அவன் எங்கே இருக்கான்னு எங்களுக்குத் தெரியாது. ஆனா, சாமி உனக்குத் தெரியும். எப்படியும் நீ சொன்னதைச் செய்வே. இந்தக் காவல் எப்பவும் எங்களுக்கு வேணும் கருப்பா.."

–என்று நைச்சியமாக இன்னொருத்தர் பேசினார். சங்கீதா கவனமாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே வந்தாள்.

ஒரு பெண்ணைச் சுற்றி இப்படி பலபேர் அமர்ந்து பணிவாக பேசுவதும், துளியும் அவநம்பிக்கையின்றி ஒரு தீர்ப்பு

கிடைத்துவிட்டதாகவே கருதுவதும் அவளுக்கு மிக ஆச்சரியமாக இருந்தது.

சம்பந்தப்பட்ட குற்றவாளியே பயந்து ஓடிப்போய் இருப்பது இன்னும் ஒரு ஆச்சரியமாக அவளுக்குள் பெருகிற்று.

'இதெல்லாம் வெறும் நம்பிக்கை மட்டும்தானா? இல்லை, இதுதான் இன்றைய கிராமங்களின் யதார்த்த குணமா...?'

'இப்படிப்பட்ட நம்பிக்கைகளுக்கு நடுவிலும் எப்படித் தவறு செய்கிறார்கள்?'

அவளுக்குள் 'லாஜிக்'காய் பல கேள்விகள்.

அப்படியே திரும்பி சாத்தப்பனைப் பார்த்தாள். 'நான் சில கேள்வி கேட்கலாமா?' என்று சைகையில் கேட்டாள்.

சாத்தப்பன் தடுமாறினான்.

தலைவர் இதை கவனித்துவிட்டு "என்னம்மா... எதாச்சும் கேக்கணுமா?" –என்றார்.

"ஆமாங்க..."

"சும்மா கேளு..."

"ஒரு பேச்சுக்கு கேக்கறேன். அந்த குற்றவாளியை கருப்பசாமி எப்படியோ கொன்னுடுதுன்னே வைப்போம். அதனால இவருக்கு எப்படி இவரோட நிலம் திரும்பக் கிடைக்கும்?"

–அவளது கேள்வி எல்லோரையும் ஒருமுறை ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள வைத்தது. ஆனால், காத்தாயி வாயையே திறக்கவில்லை.

"இன்னொரு கேள்வி..." –சங்கீதா அடுத்த கேள்விக்கு தயாரானாள். சாத்தப்பன் 'வேண்டாம்' என்கிற மாதிரி 'சைகை' செய்தான்.

"இப்படி தப்பு செய்யறவங்களைத் தெய்வமே வந்து தண்டிக்கும்னா அப்புறம் யாருமே தப்பு செய்யமாட்டாங்க. பயப்படுவாங்க. ஆகையால இதை நான் வரவேற்கறேன்.



சமுதாயத்துக்கும் இது நல்லதுதான். ஒருவகைல இதுதான் சரியான பரிபாலனமும்கூட....

இந்த பரிபாலனம் இந்த ஊருக்கு மட்டும்தானா? இந்த உலகத்துல எவ்வளவோ பேர் பல குற்றவாளிகளால பாதிக்கப்பட்டுகிட்டே இருக்காங்க. அவங்களுக்கு எல்லாம் இல்லையா?"

–சங்கீதா கேட்டு முடித்த மறுநொடி.

"எல்லோருக்கும்தான்" –என்று ஒரு பதில் காத்தாயியிடம் இருந்து வந்தது.

வாயே திறக்காதவள் வாயைத் திறந்துவிட்டாள். சங்கீதா அதனால் ஒன்றும் மகிழ்ந்துவிடவில்லை.

"அப்ப இனி இந்த நாட்டுல யாரும் தப்பு செய்யமாட்டாங்க. தப்பு செய்யறவங்களை கருப்பு சும்மா விடாதா?" –வக்கில் போல கேட்டாள்.

"எப்பவுமே தப்பு செய்யறவங்கள நான் விட்டதில்லை. நேத்தும் சரி, இன்னிக்கும் சரி, நாளைககும் சரி..." –காத்தாயியும் நெற்றியடியாக பதிலைத் தந்தாள்.

"அப்படித் தெரியலியே... உங்க பதில்ல குழப்பம் இருக்கே. நேத்தும் நான் விட்டதில்லைன்னா... எப்படி காளிங்கன் தப்பு பண்ணிட்டு இந்த நிமிடம் வரை உயிரோடு இருக்கான்."

"உயிரை வாங்கறது என் கடைசி விருப்பம். திருந்த சந்தர்ப்பம் தரணுமில்லையா?" –சங்கீதாவுக்கு உடனேயே புரிந்துவிட்டது. கொஞ்சம் சிரிப்பும் வந்தது. அடக்கிக்கொண்டாள். அதற்கு மேல்

### மகளிர் மட்டும்...

**மா**தவிடாய் நேரத்தில் அதிக ரத்தப் போக்கால் அவதிப்படும் பெண்களுக்கு ஆங்கில மருத்துவத்தில் 2 சிகிச்சைகள் உள்ளன. முதலாவது, பலூன் வாயிலாக நடக்கும் சிகிச்சை, இரண்டாவது, 'ஹார்மோன்' மருத்துவம். பெண்களின் உதிரப்போக்கு பிரச்சினைகளுக்கு இந்த இரண்டு சிகிச்சைகளும் நிரந்தரதீர்வு தரும் என்கிறார்கள், டாக்டர்கள்.

...யில்லாதவள் போல எழுந்து நின்றாள்.

சாத்தப்பன் வெறித்தான்.

"வாங்க, போகலாம்..." -என்று அவனை அழைத்தாள். சாத்தப்பனும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு அவளை பின்தொடர்ந்தான். வீதிக்கு வந்த பின் வாயைத் திறந்தான்.

"என்ன தாயி நீ... இப்படியா கேள்வி கேப்பே?"

"ஏன் சாத்தப்பா... நான் என்ன தப்பா கேட்டுட்டேன்?"

"எனக்குச் சொல்லத் தெரியல தாயி. நீ கேட்டதும் நாயம்தான். அதேநேரம் கருப்பு எப்படி பதில் சொல்லிச்சு பார்த்தியா?"

"இந்த பதிலைத்தானே எல்லாரும் சொல்றாங்க."

"என்ன சொல்றே நீ?"

"பின்ன... அது எவ்வளவு சாமர்த்தியமான ஒரு பதில் தெரியுமா?"

"புரியல தாயி..."

"உனக்கு புரியாது. என்னால மலையைத் தூக்கமுடியும். தெரியுமா உனக்கு..."

"எப்படி தாயி?"

"முடியும்... நான் தூக்கிக்காட்டுறேன். எவ்வளவு பந்தயம்?"

"அதுதான் எப்படி தாயி... ஒரு பொட்டியை உன்னால தூக்கமுடியல. நீ எப்படி தாயி மலையை?"

"இங்க இந்த கேள்வியை கேட்கத் தெரியும்... ஆனா, அங்க அந்த காததாயிகிட்ட கேக்க தெரியாதாக்கும்?"

"நீ என்ன தாயி சொல்றே...? எனக்கு ஒண்ணுமே புரியமாட்டேங்குது!"

"நான் என்ன சொன்னேன் இப்ப...?"

"மலையைத் தூக்கமுடியும்னே...?"

"அது முடியுமா... முடியாதா?"



"அது எப்படி முடியும் தாயி...?"

"முடியாதுல்ல...?"

"நிச்சயமா...!".

"ஆனா, என்னால முடியும்...?"

"அப்ப எப்படின்னு சொல்லு."

"நீ அதை என் தலைல தூக்கி வை. அப்புறம் நான் தூக்கறேனா இல்லையான்னு பார்..."

"ஆ... நீ அப்படி வர்றியா? ஆமாம்... இதுக்கும் கருப்பு பதிலுக்கும் என்ன சம்பந்தம்?"

"அது கருப்பு பதில் இல்ல. முதல்ல தெரிஞ்சுக்கோ. அது காத்தாயி. கருப்பை அவ நல்லாவே பயன்படுத்திக்கிட்டு இருக்கா."

"எப்படி? எப்படி?"

"அவ என்ன பதில் சொன்னா... அதைச் சொல்..."

"'காளிங்கனை நேத்தே ஏன் நீ தண்டிக்கலை'ன்னு கேட்டே. பதிலுக்கு அவ 'திருந்த சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா?'ன்னு கேட்டா."

"இப்ப சொல்றேன் கேட்டுக்க... இந்த ஒன்பது நாள் கெடுவுல அந்த காளிங்கன் பயந்து நடுங்கி கால்ல விழலைன்னா அவன் திருந்த ஒரு சந்தர்ப்பம் தந்துருக்கேன்னு சொல்லி சாமர்த்தியமா கருப்பை இவ மலை ஏத்திடுவா..."

"அப்ப காத்தாயி உடம்புல கருப்பு இல்லையா...? எல்லாம் நாடகமா?"

"நிச்சயமா."

"சரி... அவ புருஷன் செத்தானே... அதுவும் குதிரை துரத்தி... அது எப்படி?"

"அது ஒரு தற்செயலான சம்பவம். அதை அவ புத்திசாலித்தனமா பயன்படுத்திக்கிறாள்னுதான் நான் நினைக்கறேன்."

"அப்ப சங்கிலிக்கருப்பு-அதோட அரிவாள் கோட்டையைவிட்டு புறப்பட்டு இவமேல இறங்கிடிச்சுங்கறது எல்லாம்?"

"பொருகுன்னு சொல்லமாட்டேன். அதெல்லாம் பூசாரியோட நம்பிக்கைகள். அவ்வளவுதான்."

"அப்ப சாமியெல்லாம் கிடையாதா?"

"இருந்தா நல்லா இருக்கும்கிற மாதிரி ஒரு ஆசை வருது இல்ல...?"

"ஆமாம் தாயி.. அது இருக்குன்னா கொஞ்சத்துக்கு கொஞ்சம் பயமாவது இருக்கும். அது இல்லேன்னா காளிங்கன் மாதிரி அக்கிரமக்காரங்கள்ல அதிகமாவாங்க?"

"என்ன பண்ணுறது..? அந்தக் கருப்பன் இருந்துட்டா ரொம்ப ரொம்ப நல்லாதான் இருக்கும். நானே என் பத்திரிகையில எவ்வளவோ பேரை பத்தி எழுதி இருக்கேன். அவங்க முகவரி எல்லாம் கருப்புக்கு கொடுத்து, 'காலி பண்ணு இவங்களை'ன்னு சொல்வேன். ஆனா, இதெல்லாம் ஒரு கற்பனையாகவே இருக்குதே..."

"என்ன சொன்னே?"

"கற்பனையால்ல இருக்குன்னு சொன்னேன்."

"என்னதாயி.. பொசுக்குன்னு போச்சு எனக்கு.."

"அதுக்குதான் கண்ணைத் திறந்து வெச்சுகிட்டு தெளிவா பாக்கணும், திடமா யோசிக்கணும்கறது." -பேசிக்கொண்டே நடந்தார்கள்.

வயல்காட்டுப் பக்கமாக வந்தார்கள். பாண்டியன் உட்கார்ந்து கொண்டிருந்தான். இருவரையும் பார்த்தான்.

"அலோ மிஸ்டர் பாண்டியன். உங்கவீட்டுக்குத்தான் போயிட்டு வரேன்" -சங்கீதா அவனிடமும் ஆரம்பித்துவிட்டாள்.

"என்ன சொன்னார் கருப்பசாமி?"

"ஒன்பது நாள் தவணை எல்லாம் கொல்றதுக்கு இல்ல. திருந்தறதுக்குதானாம். திருந்திட்டா விட்டுருமாம்..."



"இல்லாட்டி...?"

"திரும்பவும் தவணை தருமாம்!"

"பரவாயில்ல... காத்தாயி தன் பொழப்புக்கு வழி கண்டுபிடிச்சுட்டா."

"அதத்தான் நானும் சாத்தப்பன்கிட்ட சொன்னேன். நீங்களும், நானும் கிட்டத்தட்ட ஒண்ணாத்தான் யோசிக்கிறோம்."

"என்னவோ.. எனக்கு எரிச்சலா வருது."

"கவலைப்படாதீங்க... ஆமாம், அந்த ஆயிரம் அரிவாள் கோட்டை எங்கே இருக்குது?" -சங்கீதா திடுமென்று கதையை மாற்றுவது போல அந்தக் கேள்வியைக் கேட்கவும், பாண்டியன் பதிலுக்கு சிரித்துவிட்டு-

"இப்ப அங்கபோய் நோண்டிப் பாக்கணுமா?"

"நிச்சயமா... சங்கிலிக்கருப்பு... கோட்டை... அரிவாள்... எல்லாத்தையும் பார்க்கவேண்டாமா?"

"அதுக்கு பஸ் ஏறிப் போகணும் தாயி.. கோட்டைப்பட்டி என்ன பக்கத்துலையா இருக்கு."

"எங்க இருந்தா என்ன? போகணும். படம் எடுக்கணும்... கட்டுரையில அதுதான் பிரதான விஷயமே.."

"கோவில்வரை பகல் பொழுதுல தைரியமா போகலாம் தாயி. ஆனா, கோட்டைக்குள்ளார போறதுக்கு யாருக்கும் தைரியம் கிடையாது."

"அப்ப[illegible]யம் உள்ளேயும் போய்பார்த்துட வேண்டியதுதான். உள்ள அப்படி என்ன இருக்கு?"

"யாருக்குத் தெரியும்? முன்னூறு ஆண்டு ஜமீன்கோட்டை. பாழடைஞ்சு கிடக்குது. கருப்புதான் அங்க படுத்துக் கெடக்கறதா ஒரு நம்பிக்கை."

"நம்பிக்கைதானே..? உண்மை இல்லையே?"

"நான் என்னத்த சொல்ல. எதைச் சொன்னாலும் அதுக்கு

ஒரு பதில் சொல்லி என் வாயைக் கட்டப்போறே.. நான் வாயை மூடிக்கிறேன் தாயி.."

"மிஸ்டர் பாண்டியன்... நீங்க வர்றீங்களா?"

"இங்க இப்படி உக்காந்துகிட்டு இருக்கறதுக்கு உங்கக்கூட வரலாம். உங்களுக்கு உதவி செய்த மாதிரி இருக்கும். நானும் அந்த கோட்டையைப் பார்த்த மாதிரியும் இருக்கும்.." –பாண்டியன் வேட்டியைத் தட்டிக்கொண்டு அவனுடன் புறப்பட்டான்.

"சாத்தப்பன்... உனக்கு விடுப்பு. நான் பாண்டியனோடு போயிட்டு வர்றேன்" என்று சாத்தப்பனை அனுப்பிவிட்டு, இவர்கள் இருவரும் கிளம்பினார்கள்.

அதற்கேற்ப மினி பஸ்சும் கண்ணில்பட்டு உற்சாகம் தந்தது.

## 11

**"கோவக்கார கருப்பன் கொந்தளிச்சுச் சிரிச்சான்**
**ஈசான்யத்துல ஒரு இடி ஓடிவந்து விழுந்திச்சு.**
**மாயக்கார கருப்பன் மனம் குளிர்ந்து சிரிச்சான்**
**மானம் கருத்து ஊர்முழுக்க மழைத்தண்ணி வழிஞ்சது**
**குதிரைக்கார கருப்பன் மீசை நீவிச் சிரிச்சான்**
**மதுரை ஜில்லா மொத்தமும் அலுங்கிக் குலுங்கி நடுங்கிச்சு."**
**–நாட்டுப்புறப் பாடல்.**

**சா**த்தப்பன் மட்டும் தனியே தெருவில் வரவும், எதற்கோ வாசலுக்கு வந்த ராமக்கா நின்று கவனித்தாள்.

சாத்தப்பன் நெருங்கவும் கேட்டாள்.

"எங்க அந்த பட்டணத்துக் குட்டி?"

"அது உன் மருமவனோடு ஆயிரம் அருவாக் கோட்டையைப் பார்க்க போயிடிச்சு."

"அங்கேயா.. எதுக்கு?" பதறினாள் ராமக்கா.



"அங்க போய் படம் பிடிக்கணுமாம். அப்படியே கோவிலையும் பார்க்கணுமாம்."

"இது என்ன விளையாட்டு...? கோட்டைக்குள்ற போனா சாமி சும்மா உடாதே..!

"அதுதான் இங்கஇருக்குதே! இப்ப அதுகாலிக்கோட்டை தானே?" –சாத்தப்பனும் புத்திசாலித்தனமாகவே கேட்டான். ராமக்காவுக்கு வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டது போல தோன்றியது.

"என்ன ராமக்கா... பேசு!"

"என்னத்த பேச... எல்லாம் இனி அந்த சாமி பாடு... அவுங்க பாடுதான். ஆனாலும், அந்தப் பெண்ணுக்கு வாய் கொஞ்சம் நீளம்தான்."

"என்னத்த நீளமோ.. அது பேசறதைக் கேட்டா அதுதான் சரின்னு தோணுது, எனக்கு?"

"அப்படி என்ன பேசினா...?"

"என்னத்தச் சொல்ல... சொன்னா உனக்கு வருத்தமா இருக்கும்."

"சும்மா சொல்லு..."

"காத்தாயி ஒண்ணும் கருப்பு கிடையாதாம். சும்மா நடிக்கிறானாம்."

"அப்படியா சொன்னா.. அந்தக்குட்டி...?"


"வேணாம் விடு. எனக்கு எதுக்கு வம்பு?" சாத்தப்பன் வேகமாக நழுவினான்.

ராமக்கா முகத்தில் ஏராளமான அதிர்வுகள்!

ஆயிரம் அரிவாள் கோட்டை!

மரங்கூட்டங்களுக்கு நடுவில் காரை உதிர்ந்து பாகம்பாகமாக கண்ணில்பட– அகண்ட விழிகளுடன் பார்த்துக்கொண்டே 'கேமரா'வை கையில் எடுத்தாள், சங்கீதா.

"ஏதாச்சும் டேய்ப்படம் எடுக்கிறவங்க வந்து 'ஷூட்டிங்' எடுத்தா





கோவிலுக்கு நாலு காசாச்சும் வரும்" பாண்டியனின் பேச்சுக்கு நடுவே சருகுகளை மிதித்துக்கொண்டு நடந்தாள்.

முகப்பில் மரத்தடியில் கருப்பு கோவில். சங்கிலி, அவிழ்ந்த நிலையில்! கூட்டமே இல்லை. காமிராவில் கருப்பசாமியை வாரிச் சுருட்டினாள். தொடர்ந்து நடந்து கோட்டைப் பக்கமாய் சென்றாள்.

பாண்டியனும் விசிலடித்த படியே உற்சாகமாகவே தொடர்ந்தான்.

அகழி– பச்சையாக மழை நீர்– அதில் நீந்தும் தவளை என்கிற காட்சிகளைக் கடந்து கோட்டை முகப்பில் போய் இருவரும் நின்றனர்.

ஒருவிநாடி நின்று அவனைப் பார்த்தாள். அவ்வளவு அமைதி.

"என்ன பாக்கிறீங்க...? உள்ளே போக பயமா இருக்கா?"

"பொய் சொல்ல விரும்பலை. கொஞ்சம் பயமாத்தான் இருக்கு."

"அப்ப விடுங்க... நான்

## வாழ்க்கை என்பது...

புத்தர்பிரான், மரத்தடியில் அமர்ந்திருந்தார். அவருடைய அருள்மொழி கேட்க சீடர்கள் காத்திருந்தனர். அவர்களிடம், "ஒரு மனிதனின் ஆயுள் காலம் எவ்வளவு?" எனக் கேட்டார், புத்தர்.

"எழுபது ஆண்டுகள்" என சீடர் ஒருவர் சொன்னதும், "தவறு" என்றார், புத்தர்.

"அறுபது ஆண்டுகள்" என மற்றொரு சீடர் சொல்ல– அதையும் மறுத்தார்.

"ஐம்பது ஆண்டுகள்" என்று



இன்னொருவர் கூற– அதையும் "இல்லை" என்றார், புத்தர்பிரான்.

'ஐம்பது ஆண்டுகூடவா ஒரு மனிதனால் வாழமுடியாது?' என்ற சந்தேகத்தில் சீடர்கள் அமைதி காத்தனர். சிறிய மவுனத்திற்குப்பிறகு வாய் திறந்த புத்தர்– "மனித வாழ்க்கை வெறும் நொடிதான்" என்றார்.

"என்ன... ஒரு நொடிதானா?" என சீடர்கள் ஆச்சரியமாகக் கேட்டனர்.

"ஆம்... வாழ்வு ஒரேயொரு நொடி அல்ல. ஒவ்வொரு நொடியிலும் முழுமையாக வாழவேண்டும்" என்று விளக்கினார், புத்தர்.

போறேன். நீங்க பின்னால வாங்க..." பாண்டியன் முன்னால் நடந்தான். தொறுங்கிய கள்ளுப்பானையில் கால்பட்டு சத்தம் போட்டது.

சரேலென்னு ஒரு வவ்வால் காதை உரசிக்கொண்டு பறந்தது. வெளியே.

ஒருகணம் விதிர்த்துப்போய் சுதாரித்தான். அப்படியே எட்டிப் பார்த்தான். 'ஓ'வென்று வெறிச்சோடியபடி கிடந்தது, முன்பாக அறை.

"வாங்க..." என்றபடியே நடந்தான். அவளும் உள்ளே இறங்கினாள்.

"ப்ளீஸ்..." என்றபடி கையைப் பற்றிக்கொள்ளச் சொல்லி நீட்டினாள். லேசாக அவள் பயப்படுவதை அந்த பற்றுதலில் அவனால் உணர முடிந்தது.

உள்ளே கூறுபோட்டுப் பிரித்ததுபோல அறைகள். வேலைப்பாடுள்ள நிலை கால்கள்.

ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு அறையில் சிகரெட் வாடை மூக்கைச் சிணுப்பியது. கீழே பான்பராக் பொட்டலமும், காலி சிகரெட் பாக்கெட்டுகளும் இறைந்து கிடந்தன.

"கருப்பு பான்பராக்கெல்லாம் போடும் போல இருக்கே?" கிசுகிசுத்தான் பாண்டியன்.

திடீரென்று யாரோ ஓடுவதுபோல ஒரு சப்தம்! பாண்டியன் கூர்மையாக– சங்கீதா அவனோடு ஒட்டிக்கொண்டாள்.

"பயப்படாதீங்க... யாரோ உள்ளே இருக்காங்க" –பார்வையை சுழலவிட்டான். திரும்பவும் நடை....

சுரங்கப்பாதை போல ஒரு வழித்தடம். அதில் மேலாக ஒரு சில சீட்டுகள் கிடந்தன.

"திருட்டுப்பசங்க டேரா போட்ருக்காங்க போல..." மீண்டும் கிசுகிசுத்தான் பாண்டியன். பாதையில் இறங்கிப் பார்க்க



முயன்றான்.

"பார்த்து... கவனம்."

"என்ன ஆனாலும் சரி... தைரியமா வாங்க" அவனோடு இறங்கினான்.

அந்தப் பாதை வளைந்து திரும்பியது.

திருப்பத்தில் அவர்களும் திரும்பியபோது தூக்கி வாரிப்போட்டது.

எதிரில் வெறித்த விழியோடு காளிங்கன்! அவனோடு தாடியும், மீசையுமாய் சிலர். காளிங்கனின் முறைப்பில் அனல்!

"கா... காளிங்கா... நீயா?" பாண்டியன் தடுமாறினான்.

"நானேதான்... கருப்பசாமின்னு நினைச்சியா?" எகத்தாளமாகக் கேட்டான்.

"நீ... நீ... எங்க இங்க?"

"நான் மட்டுமில்ல... இதோ, ஜெயில்ல இருந்து தப்பிச்சிவந்த மாடசாமி, குழந்தைவேலு, தூக்குக் கைதி ராமையா... எல்லாருக்கும் இதுதான் இடம். நீதான் தடம்மாறி வந்துருக்கே? ஆமா, குட்டி யாரு?" காளிங்கன் பேச்சோடு பேச்சாக ஒரு நாட்டுத் துப்பாக்கியை கையில் எடுத்தான்.

"அடப்பாவிகளா... அப்ப இங்க கருப்பசாமி இல்லியா...?"

"நாங்கதான் இங்க கருப்பு... எந்த காலத்துல கருப்பு இருந்துருக்கு... இப்ப வர்றதுக்கு...?"

"அப்ப எதுக்கு காத்தாயிக்கு பயந்து ஓடிவந்தே?"

"யாரு பயந்து ஓடிவந்தா... அவ சாபம் வெளுக்கணும்னா ஒன்பது நாள் கழியணும்னுதான் இங்க காத்துகிட்டிருக்கேன்... பத்தாம் நாள் பாரு. அவ என்ன ஆறான்னு..."

"காளிங்கா... நீ மனுஷங்களைத்தான் ஏமாத்தறவன்னு நினைச்சேன். இப்பதான் தெரியுது. சாமியையே ஏமாத்தறவன்னு..."

"ஏமாத்தவறன் கிடையாது. பயன்படுத்திக்கிறவன்னு சொல்லு. ஆமா, நீ எப்படி இங்கே வந்தே? நான் இருக்கிறது உனக்கு எப்படி தெரியும்?"

"அது உனக்கு தேவையில்லாத விஷயம்..." என்று கீழே வேகமாகக் குனிந்தவன்– புழுதியை வாரி அவர்கள் மேல் இரைத்துவிட்டு, "சங்கீதா மேடம் ஓடிவாங்க..." என்றபடியே படியில் வேகமாக ஏறினான். அவளும் வேகமானாள்.

"ஓடுங்க... திருட்டுப்பசங்க எது வேணா செய்வாங்க. நான் ஒண்ணும் சினிமா கதாநாயகன் இல்ல... பறந்து பறந்து சண்டை போட..." –என்றபடியே அவளை இழுத்துக்கொண்டு ஓடினான். அவர்களும் துரத்திக்கொண்டு ஓடிவந்தனர்.

ஓடிவரும் வழியில் ஒரு இருட்டு அறை குறுக்கிட– சரேலென்று உள்புகுந்தான்.

அவர்கள் அந்த அறையைக் கடந்து வெளியே ஓடினார்கள்.

"விடாதடா... விட்டா ஆபத்து..." என்று காளிங்கன் கத்துவது காதில் கேட்டது.

அதேவேளையில் இடி சப்தமும் காதில் விழுந்தது. மழை வருவதற்கான அறிகுறிகள்.

சங்கீதா, பாண்டியனை அந்த இருட்டில் கட்டிக்கொண்டாள். மழைப் புறா போல ஒடுங்கியும் போனாள்.

அந்த நிலையிலும் "என் அப்பா, 'நீ விஜயசாந்தி இல்லே'ன்னு சொன்னது சரியாப்போச்சு. நான் அவசரப்பட்டுட்டேன்" என்றாள்.

"பேசாதீங்க... எதிரொலிக்குது பாருங்க" என்று அவளது வாயைப் பொத்தினான்.

அமைதி...

நடுவில் மழைச் சப்தம் கேட்டது.

அவர்கள் குரலோ. நடமாட்டமோ அதன்பின் கேட்கவே இல்லை



வானமே தரைதட்டி நொறுங்கினாற்போல ஒரு இடி சப்தம் மட்டும் கேட்டது.

இருவருமே காதுகளைப் பொத்திக்கொண்டனர்.

அந்த நேரத்தில் தன்னை மறந்து 'கருப்பா' என்றான், பாண்டியன்.

"அந்த சாமி இப்ப உண்மையிலுமே இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?" கட்டிக்கொண்டே கிசுகிசுத்தாள்.

மீண்டும் அமைதி.

துளிகூட சப்தம் இல்லை.

அவர்கள் இருக்கிறார்களா... ஓடிவிட்டார்களா...? ஒன்றும் தெரியவில்லை.

சங்கீதா தன் ரேடியம் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இரவு எட்டு என்றது, அது.

கடவுளே... சாயங்காலம் வந்த நாம இரண்டு மணி நேரமா உள்ளே இருக்கோம். இப்படியே எவ்வளவு நேரம்?" கேட்குமுன் குதிரைக் குளம்படி சப்தம் கேட்டது.

"இதென்ன குதிரை ஓடுற சப்தம்...?"

"தெரியல... எல்லாமே மர்மமாக இருக்கு..."

"வெளிய எட்டிப் பார்ப்போமா?"

"வேற வழி...?" அவனும் நைசாக விலகி எட்டிப் பார்த்தான். கண்ணைக் கரித்தது இருட்டு. ஒன்றும் தெரியவில்லை.

சங்கீதா தன் 'பென் டார்ச்'சை எடுத்து நீட்டினாள்.

அதை வாங்கினான்.

வட்டமாய் வெளிச்சம் விழுந்து வழி காட்டியது.

மெல்ல...

மிக மெல்ல...

மிக மிக மெல்ல...

இருவரும் வெளியில் வந்தனர். மழை தூறியபடியே இருந்தது. 'டார்ச்' ஒளியை திமிர்த்தி –நேரே பாய்ச்சினான், பாண்டியன்.

அடுத்த நொடி விக்கித்துப் போய்விட்டான்.

முகப்பு வாசல் இரும்புக் கதவை பற்றிக்கொண்டு நான்கு கரிய உருவங்கள்! சங்கிதா உறைந்தே போய்விட்டாள்.

வெளிச்சம் பட்டும் அந்த உருவங்களிடம் அசைவில்லை.

அதன் பிறகே நெருங்கினார்கள்.

நான்கு பேரும் இடிபாய்ந்து கருகிப் போயிருந்தார்கள். காளிங்கன் மட்டும் சுமாராக அடையாளம் தெரிந்தான்.

'திடும்'மென்று குதிரைகளைப்புச் சப்தமும், சங்கிலிகள் உரசும் சப்தமும் காதில் மோதின.

நெஞ்சு அடைக்க திரும்பியபோது மின்னல் வேகத்தில் குதிரை மேல் யாரோ சங்கிலி சரசரக்க செல்வது மட்டும் தெரிந்தது.

"கடவுளே– அது– அது–"

"இல்லேன்னு நாம நினைச்ச, காளிங்கன் நினைச்ச கருப்பசாமியோ?" கேள்வியோடு நடந்து மரத்தடி சந்நதிக்கு வந்தபோது– யாரோ திட்டமிட்டு ஏற்றியது போல ஒன்பது அகல் விளக்குகள்!

பாண்டியனுக்கு புரிந்துவிட்டது.

"மேடம்... நாம பார்த்தது சாமியை. அது தீர்ப்பு எழுதிடிச்சு... நமக்கு தெரியணும்னுதான் இத்தனை நாளா விட்டுவெச்சிருந்துச்சோ?"

"தெரியல... என்னால இதை நம்பவும் முடியல... நம்பாம இருக்கவும் முடியல..."

"வாங்க போகலாம்... பகல் பொழுதுல வந்து பார்ப்போம்..."



அவள் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு நடந்தான்.

இருவரும் வீட்டுக்குள் நுழையவும், ராமக்கா ஒரு மாதிரி ..ர்த்தாள்.

பாண்டியனை மட்டும் தனியே அழைத்தவள்,

"பாண்டி! அந்தப் பொண்ணு கெட்டிக்காரிதான். நம்ம ..த்தாயி கருப்பு வேடம் போட்டதை எப்படியோ ..டுபிடிச்சிட்டா... அதுகிட்ட சொல்லு. எல்லாம் அந்த ..ளிங்களை மிரட்டிப்பணிய வைக்கத்தான்னு..."

அவன் சிரித்தான்.

"அவசியம் இல்ல அத்தை..." என்றான்.

"என்ன சொல்றே? கருப்பெல்லாம் இல்ல... ஒத்துக்கறோம். ..து பத்திரிகைல எழுதி, கதையைக் கெடுத்துடப் போகுது..."

"இல்ல அத்தை... கருப்பு இருக்குது! அதுல உனக்கு சந்தேகமே ..ண்டாம்" என்றபடியே கூரைச் சரிவில் செருகி இருந்த ..ிவாளைப் போய் உருவினான். அப்படியே பூஜை அறையில் ..ண்டு சென்று நட்ட நிலையில் வைத்துவிட்டு அப்படியே ..ஷ்டாங்கமாக கீழே விழுந்தான்.

ராமக்கா புரியாமலே பார்க்கிறாள்!

விடிந்தால் புரிந்துவிடாதா என்ன?

**(முடிந்தது)**

..ணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், ..ரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண ..ம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.